# புதிய ஜனநாயகம்

1-15 ஜூலை 1997

ரூ. 3.50




## சாதிய ஒடுக்குமுறைக்கே சமாதானப் பேச்சு

www.padippakam.com

www.padippakam.com

# வி.வி.மு. வின் அதிரடி நடவடிக்கை 38 கொத்தடிமைகள் மீட்பு!

அவர்கள் யாரும் வானளாவிய அதிகாரம் படைத்த அதிகாரிகள் கிடையாது; துப்பாக்கிகள் ஏந்திய போலீசுப் பட்டாளத்தின் பாதுகாப்பும் அவர்களுக்குக் கிடையாது. ஆனாலும் அவர்கள் ஒரே நாள் நள்ளிரவில் 18 கொத்தடிமைக் குடும்பங்களை மீட்டெடுத்தனர். பொழுது புலர்ந்த பொழுதோ, பென்னாகரம் பகுதியே இது பற்றி வியந்து பேசியது. தேநீர்க் கடைகளில், கடை வீதியில், பேருந்தில், திரையரங்கில் — இப்படி நாலுபேர் ஒன்றாகக் கூடும் எல்லா இடங்களிலும் இந்த மீட்பு பூற்றி வியந்து பேசிக் கொண்டார்கள். பேசி முடிக்கும்போது பலரும் சொன்ன செய்தி இது தான்: ''வி.வி.மு.காரனால்தான் இது முடியும்''

★ ★ ★

பெங்களூருக்கு அருகேயுள்ள பேகூர் என்ற கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதியில் ஏராளமான கல் குவாரிகள் உள்ளன. இக் குவாரிகளுள் ஒன்று பேகூர் பாறை. இதன் முதலாளி மௌலா சாகிப். இவனது குவாரியில் பென்னாகரம் வட்டத்தைச் சேர்ந்த நாகதாசம்பட்டி, கே. அக்கிரகாரம், போடூர் கிராமங்களைச் சேர்ந்த 18 குடும்பங்கள் கடந்த ஒரு வருடமாகக் கொத்தடிமைகளாக வேலை பார்த்து வந்தனர். இரண்டாயிரத்தையும், மூவாயிரத்தையும் முன் பணமாகக் கொடுத்துவிட்டு, சம்பளம் கூடத் தராமல் வெறும் கஞ்சியை மட்டும் ஊற்றிவிட்டு, அந்த அப்பாவித் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி வந்துள்ளான் மௌலா சாகிப்.

கல்லுடைக்கும் இடமும், குடிசையும் தான் அவர்களது உலகமாக மாறிப்போனது. இயற்கை உபாதைகளுக்குச் செல்லும் போது கூட அவர்களை அவனது அடியாட்களின் கழுகுக் கண்கள் பார்த்துக் கொண்டேயிருக்கும். பீடி வாங்கச் சென்று திரும்பிய இராசேந்திரன் என்பவரை அடியாட்கள் தாக்கியதில், அவரது மூக்கு - காது வழியே இரத்தம் ஒழுகி, உடம்பெங்கும் இரணமாகிப் போனது.

அங்கிருந்து தப்பி ஓடி வந்த ஒருவர் பென்னாகரம் வி.வி.மு. தோழர்களைச் சந்தித்து, மௌலா சாகிபின் பிடியில் இருந்து தங்களை மீட்கும்படிக் கூறினார். வி.வி.மு. தோழர்கள் அரசு அதிகாரிகளிடம் இது பற்றி புகார் கொடுத்தனர். புகார் கொடுத்து 1 ½ மாதங்கள் கழிந்த பின்னும், அதிகார வர்க்கம் அசைந்து கொடுக்கவில்லை. இதனிடையே மௌலா சாகிப், தன் மீது வி.வி.மு. புகார் கொடுத்திருந்ததை அறிந்து கொண்டு, அந்த ஆத்திரத்தில் அத்தொழிலாளர்களைத் தாக்கியதோடு, அடியாட்களோடு சேர்ந்து கொண்டு பெண்களை மானபங்கப்படுத்தவும் முயன்றான்.

இத்தாக்குதல் பற்றி அறிந்த வி.வி.மு. வினர் நேரடியாகக் களத்தில் இறங்க முடிவு செய்தனர். 16.5.97 அன்று இரவு 25 - க்கும் மேற்பட்ட வி.வி.மு. தோழர்கள், அதிரடிப் படையினைப் போல் இறங்கி பேகூர் கல் குவாரியைச் சுற்றி வளைத்தனர். அடியாட்கள் அனைவரும் ஆயுத முனையில் சிறை பிடிக்கப்பட்டனர். அங்கு கொத்தடிமைகளாக வேலை பார்த்து வந்த 38 தொழிலாளர்களையும் பாதுகாப்போடு தாங்கள் கொண்டு வந்திருந்த லாரியில் ஏற்றி, மீட்பு நடவடிக்கையை வெற்றிகரமாக நடத்தி முடித்தனர்.

''தமிழ்நாட்டில் கொத்தடிமைத்தனம் நிலவுகிறதா? எத்தனை கொத்தடிமைகள் உள்ளனர்?'' எனத் தமிழக அரசுக்கும், உச்ச நீதி மன்றத்திற்கும், தன்னார்வக் குழுக்களுக்கும் இடையே மயிர் பிளக்கும் வாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில்தான் வி.வி.மு. தனது சொந்த முன் முயற்சியின் மூலம் இம்மீட்பு நடவடிக்கையை எடுத்தது. ஆமை வேகத்தில் நகரும் அரசு இயந்திரத்தை நம்புவதைவிட, கீழிருந்து எழும் இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம்தான் கொத்தடிமைகளைத் தாமதமின்றி மீட்க முடியும். இதன் காரணமாகவே மீட்கப்பட்ட அத்தொழிலாளர்கள் வி.வி.மு. மீது நன்றியறிதலோடு பற்றும் பாசமும் காட்டி வருகின்றனர்.

தகவல்:
வி.வி.மு., பென்னாகரம்.

# பின்னி நிர்வாகத்தில் இருந்து சாராய உடையார் கும்பலை விரட்டியடிக்க ஒன்றுபட்ட தொழிலாளர்கள் சபதம்!

சென்னையில் உள்ள பின்னி ஆலை 125 ஆண்டுகள் பழமை வாய்ந்தது; கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய்க்கு சொத்துக்கள் உடையது. 1986 - இல் வெறும் 6 கோடி ரூபாய் மூலதனத்தைப் போட்டு இவ்வாலையைக் கைப்பற்றிய சாராய உடையார் - எத்துராசன் கும்பல், இத்திரண்ட சொத்துக்களை விழுங்கிவிடக் கடந்த பத்தாண்டுகளாக முயன்று வருகிறது. பின்னி ஆலை அமைந்துள்ள 221 ஏக்கர் நிலத்தை வீட்டு மனைகளாகக் கூறுபோட்டு விற்பதும், ஆலைக்குச் சொந்தமாகப் பல்வேறு நகரங்களில் உள்ள கடைகளையும், கட்டிடங்களையும் கைப்பற்றிக் கொள்வதும்தான் இக்கும்பலின் நோக்கம். இதற்காகவே ஆலை நட்டத்தில் இயங்குவதையும், ஆலைக்குள் மழை நீர் புகுந்ததையும் காரணமாகக் காட்டி ஆலையை பலமுறை இழுத்து மூடிவிட்டது. பின் தொழிலாளர்கள் விடாப்பிடியாகப் போராடி ஆலையைத் திறக்க வைத்தனர். இப்படி கடந்த பத்தாண்டுகளாக பின்னி தொழிலாளர்களின் உயிரைச் சிறுக சிறுகப் பறித்து வந்தது சாராய உடையார் - எத்துராசன் கும்பல்.

கடந்த ஆண்டு ஜூனில் பெய்த மழையால் ஆலையினுள் வெள்ளம் புகுந்ததைக் காரணம் காட்டி இழுத்து மூடப்பட்ட ஆலை, ஒரு வருடமாகியும் இன்னும் திறக்கப்படவில்லை. 1.11.96 முதல் ஆலையைத் திறக்க வேண்டும் என உத்தரவிட்டது தி.மு.க. அரசு. ஆலை நிர்வாகம் இந்த உத்தரவை எதிர்த்து நீதிமன்றம் சென்றது. உயர்நீதி மன்றம் அரசின் அறிவிப்பு சரியென வழங்கிய தீர்ப்பும் குப்பைக் கூடைக்குத்தான் சென்றது. 23.2.97 - இல் நடந்த முத்தரப்பு பேச்சு வார்த்தையில், 1.3.97 முதல் ஆலையைத் திறப்பது என்ற முடிவுக்கு பின்னி நிர்வாகம் சம்மதிக்கவில்லை. தொழிலாளர்களின் சம்பளத்தை மட்டுமின்றி, நீதிமன்ற உத்தரவுப்படி அவர்களுக்கு வழங்க வேண்டிய ரேஷன் மற்றும் உணவுப் பொருட்களையும் பதுக்கி வைத்துக்கொண்டு தர மறுக்கிறது உடையார் கும்பல்.

இந்நிலையில், பின்னி ஆலை நிர்வாகத்தில் இருந்து சாராய உடையார் - எத்துராசன் கும்பலை அகற்றவும், பின்னி ஆலையை அரசே ஏற்று நடத்தவும் கோரி 28.5.97 அன்று பின்னி தொழிலாளர் சங்கம் பேரணியொன்றை நடத்தியது. இப்பேரணிக்கு சென்னையில் இயங்கிவரும் அசோக் லேலண்ட், சிம்சன், எம்.ஆர்.எஃப்., ஜி.ஈ.சி. அல்ஸ்தோம் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட ஆலைகளின் தொழிற் சங்கங்களும், சென்னை மாவட்ட புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியும் ஆதரவளித்தன. எம்.ஆர். எஃப். ஆலை வாயிலில் தொடங்கி திருவொற்றியூர் தேரடியில் முடிந்த இப்பேரணிக்குத் தொழிலாளர்களோடு பகுதி பொது மக்களும் ஆதரவளித்தனர். பேரணியின் முடிவில் தெருமுனைக் கூட்டம் நடந்தது.

இதன் அடுத்த கட்டமாக, 4.6.97 அன்று சென்னையில் குறளகம் முன்பு, பேரணியின் கோரிக்கைகளை வலியுறுத்தி ''தொடர் முழக்கப் போராட்டம்'' நடைபெற்றது. இப்போராட்டத்தை ஆதரித்து புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி 100 சுவரொட்டிகளைத் தயாரித்து, போராட்டம் நடைபெற்ற பகுதியெங்கும் ஒட்டியதோடு, தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டது. பின்னி ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்து, அவர்களை அமைப்பாக்குவதற்குத் தொடர்ந்து முயன்று வருகிறது, முன்னணி.

தகவல்:
புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,
சென்னை.


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 12

இதழ்: 14 - 16

1 ஜூன் '97 - 15 ஜூலை '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 64.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# சாதிய ஒடுக்குமுறைக்கே சமாதானப் பேச்சு

"நான் பத்திரிகையில் படித்தது, பலர் சொல்லக் கேட்டது இவற்றையெல்லாம் விட இங்கே சோகம் அதிகமா இருக்கு. இதை என்னால நம்பவே முடியவில்லை. நம்ம தமிழ்நாட்டிலா இப்படி?", "எல்லாரும் மனுஷ ஜாதிதானே, தாயா புள்ளையா ஆயிரம் வருஷம் இருந்தவங்க தானே! இப்ப மட்டும் என்ன வந்துட்டுது!", "ஏன் பிரச்சினை? ரெண்டுபேரை எரிச்சுட்டாங்க இந்தக் கிராமத்திலே.. அது ஏன் நடக்கணும்? அதுதானே இப்போ இப்படிப் பெரிய பிரச்சினையைக் கிளப்பி விட்டுடுச்சு... எல்லாரும் ஒற்றுமையா இருக்கணும்", "அந்த ஜாதி, உங்க ஜாதின்னு பேசி சண்டைபோடக் கூடாது. அதுதான் முக்கியம். அரசாங்கத்தில் சொல்லி நான் பார்த்துக்கிறேன்" - தென் மாவட்டக் 'கலவரங்களால்' பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்லப் போன தமிழ் மாநிலக் காங்கிரசு தலைவர் ஜி.கே. மூப்பனார் கண்கலங்கியபடி இப்படிச் சொன்னதாகப் பத்திரிகைகளில் வந்துள்ளது.

எவ்வளவு அப்பட்டமான பொய்! சாணிப்பாலும் சவுக்கடியும் கொடுத்துத் தாழ்த்தப்பட்ட மக்களை ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் பரம்பரையின் வாரிசு பேசுகிறது. "எல்லாரும் மனுச ஜாதி தானே. தாயா புள்ளையா ஆயிரம் வருசம் இருந்தவங்க தானே! இப்ப மட்டும் என்ன வந்துட்டுது!" ஆயிரம் வருசம் என்ன, அதற்கு முன்னும்கூடத் திரும்பிப் பார்ப்போம். எப்போது ஏற்றத்தாழ்வும், படிப்படியான ஒடுக்குமுறையும் கொண்ட சாதிய அமைப்பும், அதற்கு முன்னோடியாக நான்கு வர்ணங்களும், இவற்றுக்கு வெளியே பஞ்சமன், சண்டாளன் என்கிற அவர்ணங்களும் கொண்ட சமூக அமைப்பும் உருவாக்கப்பட்டதோ, அப்போதிருந்தே பெரும்பான்மையினரான உழைக்கும் மக்கள் மீது சிறுபான்மையினர் வருண, சாதி ஆதிக்கம் செலுத்துவதாகவே சமூகம் பிளவுபட்டுக் கிடக்கிறது.

தாயா புள்ளையா வேண்டாம்; எல்லாரும் மனுச சாதிங்கிறார்களே, சூத்திர, பஞ்சம, சண்டாள சாதிகளை மனிதர்களாக வாழ எப்போதாவது அனுமதித்ததுண்டா? விவசாயக் கூலிகளாக, கழிப்பறை - சாக்கடை சுத்தம் செய்பவர்களாக, பிணம் எரிப்பவர்களாக, பறையடிப்பவர்களாக, செத்த மாடு சுமப்பவர்களாக, செருப்புத் தைப்பவர்களாக - எதெதெல்லாம் இழிதொழில்கள் என்று மேல் சாதிகளால் ஒதுக்கப்பட்டதோ அவற்றைச் செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். மறுத்தால் வன்முறைத் தாக்குதலும் தண்டனையும் வழங்கும் சட்டதிட்டங்களையே வைத்திருக்கிறார்கள். இழிபிறவிகள், தீண்டத்தகாதவர்கள் என்று பழித்து, நகர்ப்புற சாக்கடை ஓர சேரிகளிலும், கிராமப்புறக் காலனிகளிலும் இன்னமும் ஒதுக்கி வைக்கிறார்கள். பெண்கள் மாராப்பு அணியக் கூடாது, தாழ்த்தப்பட்டவர்கள் மேல்சாதிக்காரன் வாழும் தெருவில் நுழையக் கூடாது, ஒவ்வொரு சாதியும் மேல்சாதிக்காரனிடமிருந்து இவ்வளவு தூரம் ஒதுங்கி இருக்கவேண்டும், தரையிலே எச்சில் துப்பக்கூடாது என்பதற்காக கழுத்தில் களையத்தைக் கட்டிக் கொண்டு நடக்கவேண்டும், வேதத்தைக் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும் - இப்படி எத்தனை, எத்தனை கொடுமைகள். இதுதானே அன்று தொடங்கி இன்று வரை சாதிய வரலாறாக இருந்து வருகிறது.

இந்த ஒடுக்குமுறை சாதி ஒழுங்கின் அடிப்படையில், பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட சமாதானம் - அமைதிதான் இவ்வளவு காலமும் நிலவியது. இந்த சாதி ஒழுங்கை மீறினால் மேல் சாதிக்காரர்கள் என்ன செய்வார்கள் என்பதற்குச் சாட்சியமாக விளங்குபவைதாம் ஏகலைவன், சம்புகன், நந்தன், மதுரைவீரன், முத்துப்பட்டன் கதைகள். "அதெல்லாம் பழங்கதைகள்; இப்போது யார் சாதி பார்க்கிறார்கள்?" என்று பம்மாத்துச் செய்கிறார்கள் மேல் சாதிக்காரர்கள். உண்மைதான், சாதிய ஒழுங்கில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் அவை, மேல்சாதிக்காரர்கள் தமது அநியாயப் போக்கை உணர்ந்து திருந்திக் கொண்டதால் வந்தவையல்ல. ஆங்கிலேயர்கள் இங்கே தமது காலனிய ஆட்சியை நிறுவிய பிறகு, சாதியக் கிராம அமைப்பில் தாக்கங்களும் மாற்றங்களும் வரத் துவங்கின. நவீனத் தொழில்களும், கல்வியும், மத்தியப்படுத்தப்பட்ட அரசு நிர்வாக அமைப்புகளும் தமது தேவையை ஒட்டி ஏற்படுத்தியபொழுது, சாதிய அமைப்பில் சிதைவுகள் தவிர்க்க முடியாதவையாகின. பூலே, அம்பேத்கர், பெரியார், நாராயண குரு போன்றவர்கள் மேற்கொண்ட சீர்திருத்தங்கள், போராட்டங்களால் வந்தவை. இவையும்கூட மேல்சாதி ஆணவ அதிகார அமைப்பைப் புரட்சியின் மூலம் தகர்க்காமல் சீர்திருத்தங்கள், நகரமயமாதல், தொழில்மயமாதலால் வந்தவை என்பதால், ஒடுக்கப்பட்ட சாதியில் ஒரு சிலர் கல்வி ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் அடைந்துள்ள வளர்ச்சிக்குப் பொருத்தமான

www.padippakam.com

சமூக, அரசியல் உரிமையைப் பெற முடியாமல் போயுள்ளனர். இட ஒதுக்கீடு மூலம் கல்வியும் வேலை வாய்ப்பும் பெற்ற தாழ்த்தப்பட்டவர்கள் பள்ளி - கல்லூரிகளிலும், தொழிலகங்களிலும் அலுவலகங்களிலும் இழிவாக நடத்தப்படுவதும், உள்ளூராட்சி, நகரமன்றங்கள் முதல் நாடாளுமன்றங்கள் வரை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், அமைச்சர்களும்கூடத் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதால் மேல்சாதி அரசியல்வாதிகள், அதிகாரிகளால் அவமரியாதைக்குள்ளாவதும், அதிகார மறுப்பும் இன்னமும் இருக்கின்றனவே! ''எல்லாரும் மனுச சாதிதான்'' என்று இன்று பம்மாத்துப் பேசும் மேல்சாதிக்காரர்கள் தாழ்த்தப்பட்டவர்களை மனிதர்களாக மதித்து, சுடுகாடு - இடுகாடு, குடிநீர் நிலைகள், வழிபாட்டிடங்களைப் பொதுவாகப் பயன்படுத்த அனுமதிப்பதில்லையே! மேல்சாதிக்காரர்களின் தெருவழியே தாழ்த்தப்பட்டவர் பிணம் கூட எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படாததால், சுடுகாட்டுப் பாதையின்றித் தவிக்க விடுகிறார்களே! தாழ்த்தப்பட்டவன் தன் சொந்த உழைப்பில் சம்பாதித்து நல்ல உடை உடுத்தவும், செருப்பணியவும், சைக்கிளில் போகவும், தன் சொந்த உணர்வை மதித்து சாதி மாறி காதலிக்கவும், மணமுடிக்கவும் உரிமைகோரிப் போராடுகிறான். ஏற்கனவே நிலவிவரும் சாதி ஆதிக்கம் அநீதியான வன்முறையால் நிறுவிப் பாதுகாக்கப்படும்போது, மேல் சாதிக்காரனோ சாதி ஆதிக்கத்தை இழந்துவிடக்கூடாது, இத்தனை காலம் சாதி அடிமைகளாக வாழ்ந்தவர்கள் இப்போது தலைநிமிர்ந்து நடப்பதா என்கிற வெறியில் வன்முறையில் ஈடுபடுகிறான். அது அநீதியான வன்முறை. தாழ்த்தப்பட்டவன் மனிதனாக வாழவே, வன்முறை தேவையானதாக இருக்கிறது. இது நீதியான வன்முறை. இரத்தம் சிந்தப்படுகிறது, மனித உயிர்கள் பலியாகின்றன, சமூக விரோத கிரிமினல்கள் இதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதற்காக சாதி அடிமைகளாகவே தாழ்த்தப்பட்டவர்கள் வாழவேண்டுமா? இதில் பொதுவில் நின்று கொண்டு வன்முறையில் ஈடுபடும் இரண்டு தரப்பையும் குறை கூறுவது, சமாதானமாகப் போகும்படி உபதேசிப்பது எல்லாம் சாதிய ஒடுக்குமுறைக் கட்டுமானம் முற்றிலும் நொறுங்கிவிடாமல் காப்பாற்றிக் கொள்ளும் நரித் தந்திரம்தான். இவ்வளவு காலமும் சமாதானமும் அமைதியும் நிலவியது என்றால், மேல் சாதி வன்முறை ஏகபோகமாக ஆதிக்கம் வகித்தது என்றுதான் பொருள். சாதி ஆதிக்கமே, சாதிய அமைப்பே வன்முறையைக் குறிக்கிறது; அதை வன்முறையில்தான் தகர்க்கவும் முடியும்.

★★★

# அ.தி.மு.க. பிளவும் பார்ப்பனர் கனவும்

அறந்தாங்கி திருநாவுக்கரசு, ஜெயலலிதா கட்சியில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, அக்கட்சி மீண்டும் ஒருமுறை பிளவுபட்டுவிட்டது. இருதரப்பின் நியாய அநியாயங்களை மக்கள் முன் வைப்பதாகப் பாவித்துக் கொண்டு, பத்திரிகைகளும் வானொலிகளும், செய்திகளும் பேட்டிகளும், வதந்திகளும் ஊகங்களும் தருகின்றன.

பம்பாய்ப் பெருநகரின் தெருக்களில் சமூக விரோத குற்றக் கும்பல்களுக்கிடையே துப்பாக்கிச் சண்டைகள் நடப்பது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. இரகசியக் கிரிமினல் உலகை யார் கட்டுப்படுத்துவது என்பதற்காக நடக்கும் இந்தக் கும்பல் போரில் எந்தத் தரப்பு நியாயமானது, எந்தத் தரப்பு அநியாயமானது என்று பிரித்துப் பார்க்க முடியுமா?

அதுபோலத்தான் தமிழ்நாட்டையே கொள்ளையிட்டு, சூறையாடிய சமூக விரோத கிரிமினல் அரசியல்வாதிகளின் கட்சிதான் அ.தி.மு.க. அதிகார-ஆதிக்க நலன்களுக்காக ஒரே கட்சியில் திரண்டிருந்த இவர்கள், அதை இழந்த பிறகு உடைந்து சிதறிப் போகிறார்கள். அடித்த கொள்ளையைக் காத்துக் கொள்ளவும், பல்வேறு வழக்குகளில் இருந்து தப்பிக்கவும், மீண்டும் அதிகாரத்தைப் பெறமுடியும் என்கிற நப்பாசையின் காரணமாகவும் அந்தக் கொள்ளைக் கூட்டத்தின் தலைமையைத் தக்கவைத்துக் கொள்ள அல்லது கைப்பற்றிக் கொள்ள மீண்டும் மீண்டும் பிளவுகளும் பலப்பரீட்சைகளும் நடக்கின்றன. இதில் பணபலமிக்கவர்களிடம் ஆள்பலம் திரளுவதும் நடக்கிறது. இப்போது நடப்பதும் அதுதான்.

ஆனாலும் குழாயடிச் சண்டையில் பல இரகசியங்கள் அம்பலமாகி விடுவதைப் போல, ஜெயலலிதா மற்றும் அவரது எதிர்த் தரப்பு முன்னாள் கூட்டாளிகள் பற்றிய பல இரகசியங்கள் வெளிவருகின்றன.

☆ ''அ.தி.மு.க. தலைமையைக் கைப்பற்றி ஜெயலலிதாவை அரசியலில் இருந்து விரட்டுவது என்ற நோக்கத்தில் கருணாநிதியும், குறைந்தபட்சம் அ.தி.மு.க.வைப் பிளவுபடுத்தி, அதனுடன் த.மா.கா. கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடிக்கும் நோக்கத்துடன் மூப்பனாரும் சதி செய்து திருநாவுக்கரசைத் தூண்டிவிட்டு இயக்குகின்றனர்.''

☆ ''முன்பே தனிக்கட்சி நடத்திவந்த திருநாவுக்கரசு அ.தி.மு.க. பலவீனமடைந்துள்ள சமயத்தில் நுழைந்து, ''தனிக்கோஷ்டி'' கட்டித் தலைமையைக் கைப்பற்றும் திட்டத்துடன் கட்சி விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்தார். இப்போது திருநாவுக்கரசு பிரிவில் கணிசமான எம்.பி.கள், எம்.எல்.ஏக்கள் இணைந்திருந்தாலும் அவர்கள் விலை கொடுத்து வாங்கப்பட்டவர்கள் தாம்'' என்கிற இரண்டு குற்றச்சாட்டுகளை திருநாவுக்கரசுக்கு எதிராக ஜெயலலிதா கும்பல் சுமத்துகிறது.

இதை மறுத்து, திருநாவுக்கரசு பின்வரும் இரண்டு புகார்களை ஜெயலலிதா கும்பலுக்கு எதிராகச் சுமத்துகிறார்.

☆ ''ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டுக்களை எதிர்த்து சட்டமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் வாதாடி வந்திருக்கிறேன். பலவீனமாகி வந்த அ.தி.மு.க.வுக்கு புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கணிசமான அளவு அதிக வாக்குகள் பெறுவதற்காகக் கடுமையாக உழைத்து, அணிகளிடையே நம்பிக்கையை ஏற்படுத்தினேன். எம்.ஜி.ஆர். சாவுக்குப் பிறகு கட்சித்

## ஜெயா ஆதரவு பொதுக்குழு: பதவிச் சண்டையே அரசியல்





படிப்பகம்



**ஜெயா எதிர்ப்பு பொதுக் குழுவில் திருநாவுக்கரசு.**
**''உதிர்ந்த ரோமம்'' மீண்டும் உதிர்ந்ததற்கு காரணம் யார்?**

தலைமையைக் கைப்பற்றுவதற்காக நான் தான் பாடுபட்டேன். நான் இல்லையென்றால் ஜெயலலிதா அரசியலில் தலையெடுத்திருக்க முடியாது. இருந்தாலும் கொஞ்சமும் நன்றி இல்லாமல் என்மீது சந்தேகப்பட்டு நீக்கிவிட்டார்.''

☆ ''கட்சிக்குள் எனக்கு ஏற்பட்டுவரும் செல்வாக்கைக் கண்டு பயந்து, என்னை ஓரங் கட்டும் முயற்சியில் ஜெயலலிதா கும்பல் இறங்கியது. கட்சிப் பொறுப்பாளர்கள் என்னைச் சந்திக்கக் கூடாதென்று தடை விதித்தார். என்னைப் புறக்கணிக்கும் வகையில் எனது நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன. கட்சிக்குள் நான் முடக்கப்பட்டேன்.''

மேற்கண்ட இரண்டு தரப்பின் குற்றச் சாட்டுகளிலுமே உண்மைகள் இருக்கிறது. கவர்ச்சிவாத, பிழைப்புவாத, கழிசடை, பொறுக்கி அரசியலையே கொள்கையாகவும், கொள்ளையடிப்பதையே இலட்சியமாகவும் கொண்ட கட்சிக்குள் இவையெல்லாம் இயல்பாக நடக்கக் கூடியவைதான்.

இவற்றைவிட முக்கியமானது, இந்தக் கழிசடை அரசியல் நாயக - நாயகியின் பின்னே இருந்து இயக்கும் சூத்திரதாரிகளின் நோக்கம்தான். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆட்சிக்குப் பிறகு, தமக்கு வேண்டிய மூப்பனார் ஆட்சியை ஏற்படுத்த பார்ப்பன ஏடுகளும் அரசியல் தரகர்களும் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளனர். தமிழ் மக்களிடையே மூப்பனாரின் செல்வாக்கு பெருகி வருகிறதென்கிற பிரமையை ஏற்படுத்த அவர்கள் பாடுபடுகின்றனர். சினிமாக்காரன் ரஜினியின் ஆதரவிருந்தாலும் மூப்பனார் ஆட்சி பலிக்குமா என்கிற சந்தேகம் உள்ளது.

ஆகவே திருநாவுக்கரசானாலும் சரி, ஜெயலலிதாவானாலும் சரி, இரட்டை இலை சின்ன உரிமை உள்ள அ.தி.மு.க. - மூப்பனார் கூட்டணியை உருவாக்க அவர்கள் முயலுகின்றனர். அதற்காக மூப்பனார் கட்சிக்கு ஜெயலலிதா கட்சி மீதுள்ள பகை அரசியல் உணர்வையும், ஜெயா ஆட்சி மீது மக்களுக்குள்ள வெறுப்பையும் தி.மு.க.வுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, தி.மு.க. - த.மா.கா. கூட்டணியைப் பிளந்து, கருணாநிதி ஆட்சி மீது அதிருப்தி ஏற்படுத்தவே பணிபுரிகின்றனர். இதற்கு வாய்ப்பளிக்கும் வகையில்தான் கருணாநிதி ஆட்சியும் செயல்படுகிறது.

''அ.தி.மு.க.வில் ஏற்பட்டுள்ள பிளவு - இரட்டை இலை முடக்கத்தில் முடிந்தால், அது தி.மு.க.வுக்கு ஆதாயம். புதிய பிளவு, இரட்டை இலைக்கு உரிமை பெறும் அளவிற்கு பலம் பெற்றால், அது தமிழக அரசியலுக்கு ஆதாயம்'' என்று எச்சரிக்கைப் பகுதியில் அரசியல் தரகன் துக்ளக் சோ எழுதியுள்ளார். இதில் தி.மு.க. ஆதாயம் அடையும் வகையில் இரட்டை இலை முடக்கப்படுவதை ''சோ'' முதலியோர் விரும்பவில்லை.

ஜெயா பிரிவா, திருநாவுக்கரசு பிரிவா, எது பலம் பெற வேண்டும் என்று தெளிவாக குறிப்பிடாமல், ''பிளவு பலம் பெற வேண்டும்'' என்று மொட்டையாக எழுதிக் குழப்புகிறார். இதே கருத்தை ஜெயாவின் அரசியல் புரவலர் தரகு முதலாளி விஜய் மல்லையாவின் வானொளி (விஜய் டி.வி.)யும், ஜெ.வி. முதலிய ஏடுகளும் பிரச்சாரம் செய்கின்றன. ஜெயா - திருநாவுக்கரசு பிளவே சேடப்பட்டி, சத்தியமூர்த்தி போன்ற ஜெயா துதிபாடிகளின் சிண்டுமுடியும் வேலைதான் என்று சொல்லி, பிளவுக்குத் தலைமையேற்கும் ஜெயா, திருநாவுக்கரசு இருவரையுமே அப்பாவிகளாகச் சித்தரிக்கின்றன.

ஜெயலலிதா, திருநாவுக்கரசு, வீரப்பன் போன்ற எந்த அ.தி.மு.க அரசியல் தலைவர்களின் யோக்கியதை பற்றி நாம் எழுதத் தேவையில்லை. எம்.ஜி.ஆர். - ஜெயலலிதாவுக்கு அரசியலிலும், சொந்த வாழ்க்கையிலும் ''தரகு'' வேலை செய்தவர்கள்; அதையே தமது சாதனையாகப் பத்திரிகைகளிலும் எழுதி வருபவர்கள்; அதையே மூலதனமாக வைத்து அரசியல் நடத்திப் பகற்கொள்ளையடிப்பவர்கள்தான் இவர்கள். இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மகிமையையும், அரசியல் நாகரிகத்தின் அவசியத்தையும் பற்றி வாய்கிழியப் பேசி, எழுதிவரும் பார்ப்பன ஏடுகளும் அரசியல் தரகர்களும் இத்தகைய கழிசடை அரசியல் நாயகர்களை நம்பித்தான் தமிழக அரசியலே இருப்பதாக ஏற்கச் சொல்லுகிறார்கள். ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுபவன் அழுகிய பிணம் கிடைத்தால்கூட அதை மிதவையாகப் பயன்படுத்திக் கொள்ளுவதைப் போன்ற நிலைக்கு அரசியலே நிலைகுலைந்து போனதைத்தான் இது காட்டுகிறது.

● மாதவன்

# அவதூறுகளால் ம.க.இ.க.-வை அழித்து விட முடியாது!

தஞ்சைப் பெருவுடையார் கோயில் குடமுழுக்கு விழாவில் நடைபெற்ற தீ விபத்துக்கான காரணம் குறித்து காவல்துறை விசாரணைக்குத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. மின் கசிவா, வாண வேடிக்கையா அல்லது வேறு கவனக் குறைவா என்பது பற்றி மாற்றுக் கருத்துக்கள் உள்ளன. ஆனால் விபத்து என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இத்தகைய விழாக்களில் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுப்பது பற்றி இறைநம்பிக்கை கொண்டோர் மட்டுமின்றி, நாத்திகர்களும் பெரும் அக்கறை காட்டி வருகின்றனர்.

ஆனால் தனது வளர்ச்சிக்குப் பிணங்களை மட்டுமே நம்பியிருக்கும் இந்து முன்னணித் தலைவர் இராம. கோபாலன், தஞ்சையில் நடந்தது தீ விபத்து இல்லை என்றும், மக்கள் கலை இலக்கியக் கழகம் நடத்திய சதி வேலை என்றும் அவதூறு செய்துள்ளார்; தஞ்சை குடமுழக்கு விழாவை நடத்தவிட மாட்டோம் என்று நாங்கள் துண்டறிக்கை வெளியிட்டிருந்ததாகவும் கூசாமல் பொய் சொல்லியிருக்கிறார். எமது அமைப்பு பெரிதும் வளர்ந்து வருகிறது என்றும், உடனே அதைத் தடை செய்ய வேண்டும் என்றும் முதல்வருக்கு மிரட்டல் விடுத்திருக்கிறார்.

மாறாக, இந்துக்களின் ஏகபோகப் பிரதிநிதியாகத் தம்மைத் தாமே நியமித்துக் கொண்ட இந்து முன்னணி எங்கெல்லாம் நுழைகிறதோ, அங்கெல்லாம்தான் மதக் கலவரங்களும் கொலைகளும் நடக்கின்றன என்பதும், தடை செய்யப்படவேண்டியது இந்த மதவெறி அமைப்புதான் என்பதையும் தமிழக மக்கள் அறிவார்கள்.

இராம. கோபாலன் எமது அமைப்புக்கெதிராக அவதூறு செய்வது இது முதன் முறையல்ல; 1993-இல் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் கோரிக்கையை முன்வைத்து திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்தியபோது, அதை எதிர்த்துத் தீண்டாமையை நியாயப்படுத்திய இராம. கோபாலன், ம.க.இ.க.வுக்குப் பாகிஸ்தானிலிருந்து ஒரு கோடிரூபாய் பணம் வந்ததாகக் குற்றம் சாட்டினார்.

பக்தர்களின் உயிரைப் பற்றி இன்று பெரிதும் கவலைப்படும் இராம. கோபாலன், மகாமகம் சாவு குறித்து ஜெயலலிதாவைத் தமிழகமே குற்றம் சாட்டியபோது, ஜெயலலிதாவை ஆதரித்தார் என்பதிலிருந்தே அவரது உள் நோக்கத்தை தமிழக மக்கள் புரிந்து கொள்ள முடியும். தஞ்சை தீ விபத்தில் எந்தக் குற்றவாளிகளைப் பாதுகாக்க இப்போது முனைந்துள்ளார் என்பதும் விரைவில் தெரிந்துவிடும்.

இராம. கோபாலனின் இந்த அவதூறுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்போம். தஞ்சையில் ஒரு கண்டனப் பொதுக் கூட்டமும் நடத்தவிருக்கிறோம்.

தகவல்:
ம.க.இ.க., தமிழ்நாடு.


படிப்பகம்

www.padippakam.com

## நீதித்துறை - சர்வகட்சி கூட்டு

# ஹவாலா வழக்கு நாடகம் முடிந்தது

நேற்று வரை நீயும் திருடன், நானும் திருடன் என்று பழிதூற்றிக் கொண்டிருந்த ஹவாலா கொள்ளையர்கள் இப்போது நீயும் உத்தமன், நானும் யோக்கியன் என்று மார்தட்டிக் கொண்டிருக்கிறார்கள். போதுமான சாட்சியங்கள்-ஆதாரங்கள் இல்லை என்று அத்வானி, சுக்லாவைத் தொடர்ந்து குரானா, அர்ஜுன்சிங், திவாரி, சிந்தியா என அடுத்தடுத்து தேசியத் திருடர்கள் அனைவரையும் நீதிமன்றம் வழக்கிலிருந்து விடுவித்துள்ளது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, பரிசுத்த வேஷங் கட்டி ஊழல் எதிர்ப்பு முழக்கத்துடன் ''சுவர்ண ஜெயந்தி'' யாத்திரையை பா.ஜ.க. தலைவர் அத்வானி நடத்துகிறார். அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன் சகுனி நரசிம்மராவால் ஏவிவிடப்பட்ட ஹவாலா பூதம், காற்று புடுங்கப்பட்ட பலூனாகிவிட்டது என்று இனிப்புகள் வழங்கி, பட்டாசுகளைக் கொளுத்தி மற்ற தேசியத் தலைவர்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றனர்.

கடந்த ஆண்டு தேர்தலுக்கு சற்று முன்பாக அன்றைய காங்கிரசுப் பிரதமரான நரசிம்மராவ், ஜெயின்-ஹவாலா மோசடி எனும் குண்டு வீசி எதிர்த்தரப்பினர் அனைவரும் அதில் சிக்கியிருப்பதை நாறடித்தார். லஞ்ச ஊழலினால் கறைபடியாத அரசியல் தலைவர்களோ, கட்சிகளோ இருக்கவே முடியாது; எனவே சர்க்கரை ஊழல், பங்குச் சந்தை மோசடி, தொலைபேசி ஊழல் முதலான பல்லாயிரம் கோடி ஊழல் மோசடிகளைப் பெரிது படுத்த வேண்டியதில்லை என்பதே ராவ் கும்பலின் நோக்கமாக இருந்தது. 1991-லேயே ஹவாலா மோசடி அம்பலமான போதிலும் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக அதைக் கிடப்பில் போட்டு வைத்திருந்த சி.பி.ஐ. ஜெயின் டைரி-ஹவாலா பணக் கடத்தல் வழக்கை தேர்தல் நெருங்கும் நேரத்தில் அரசியல் மேடையேற்றியது. ஹவாலா புள்ளி ஜெயின் சகோதரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ''டைரி''யில் அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் என 115 பேரின் பெயர்கள் இடம் பெற்றிருந்தது. இவர்களில் 22 அதிகாரிகள் 20 அரசியல் தலைவர்களிடம் மட்டுமே சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. இதன் பிறகு, இவர்களில் 11 அதிகாரிகள், அத்வானி, சுக்லா, அர்ஜுன் சிங், திவாரி உள்ளிட்ட 10 அரசியல்வாதிகள் மீது மட்டுமே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இதை எதிர்த்து பெருங்கூச்சல் போட்ட அத்வானி, நாடாளுமன்றப் பதவி விலகி, யோக்கிய சிகாமணியாக நாடகமாடிக் கொண்டு டெல்லி உயர் நீதி மன்றத்தில் எதிர் வழக்கு தொடுத்தார். டெல்லி மாநில முன்னாள் பா.ஜ.க. முதல்வர் குரானாவும், காங்கிரசின் சுக்லாவும் இவ்வாறே தனித்தனியாக வழக்கு தொடுத்தனர். மற்ற தலைவர்கள் தனிப்பட்ட முறையில் ஜெயினிடமிருந்து ஹவாலா பணத்தை வாங்கவில்லை என்று ஒருபுறம் சவடால் அடித்துக் கொண்டே மறுபுறம், கட்சியின் தேர்தல் செலவுகளுக்காக ஹவாலா பணம் பெறப்பட்டதை ஒப்புக் கொண்டனர்.

கடந்த ஏப்ரல் 8-ந் தேதியன்று டெல்லி உயர் நீதிமன்றம், போதுமான சாட்சியங்கள் ஆதாரங்கள் இல்லையென்று ஹவாலா வழக்கிலிருந்து அத்வானியையும் சுக்லாவையும் விடுவித்தது. அதைத் தொடர்ந்து குரானா விடுதலையானார். இப்போது டெல்லி உயர் நீதி மன்றத் தீர்ப்பை அடிப்படையாக வைத்து, ஹவாலா வழக்கு சிறப்பு நீதிமன்றம் அர்ஜுன்சிங், திவாரி, சிந்தியா, தவாண் ஆகியோரையும் விடுதலை செய்துள்ளது.

ஜெயின் டைரிக் குறிப்புகளின்படி, மூன்றாண்டுகளுக்கும் மேலாக ஹவாலா பணம் அரசியல் தலைவர்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதற்கான குறிப்புகள் உள்ளதால், இதுவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய போதுமான ஆதாரம் என்கிறது சி.பி.ஐ. ஆனால் நீதிமன்றமோ, இது மட்டுமே முழுமையான ஆதாரமாகி விடாது; வேறு இதர ஆதாரங்கள்-அதாவது, குறிப்பிட்ட அரசியல் தலைவருக்கு வருமானத்தை மீறிய சொத்து, ஹவாலா பணம் பட்டுவாடா செய்யப்பட்ட நேரத்தில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதியின் வங்கிக் கணக்கில் தொகை அதிகரிப்பு, லஞ்சம் பெற்ற அரசியல்வாதி ஹவாலா புள்ளிகளுக்கு செய்த உதவிகள், சலுகைகள் பற்றிய விவரங்கள் - தேவை என்கிறது. அவ்வாறு ஆதாரங்களைத் திரட்டுவதற்கு சி.பி.ஐ. எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், சி.பி.ஐ.யின் முன்னாள் இயக்குனரான விஜய் கரண், ஹவாலா பணம் பெற்றவர்கள் பட்டியலில் இருந்தவர்தான்! இந்த லட்சணத்தில் தேசியத் தலைவர்களும் உயர் அதிகாரிகளும் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரங்களைத் திரட்டி சி.பி.ஐ. அவர்களைத் தண்டிக்கும் என்று எதிர்பார்க்கத்தான் முடியுமா?

மேலும், சாதாரண ஊழல் தடுப்பு கிரிமினல் சட்டத்தின் கீழ்தான் இத்தலைவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. குறிப்பிட்ட ஒரு ஜெயின் ஹவாலா கும்பல் 1991-லிருந்து நான்காண்டுகளில் சில அதிகாரிகள்-அரசியல்வாதிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ததைப் பற்றியதாக வழக்கு குறுக்கிச் சுருக்கப்பட்டது. இன்னும் பல ஹவாலா கும்பல்கள் இவ்வளவு காலமும் அரசின் எல்லா மட்டங்களிலும் உள்ள முக்கிய புள்ளிகளுக்கு எவ்வளவு ''மாமூல்'' கொடுத்தன, எந்த நோக்கத்திற்காகக் கொடுத்தன, அதனால் அரசுத் திட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் என்று விரிவான விசாரணைக்குள் அது செல்லவேயில்லை. ஜெயின் ஹவாலா கும்பலிடமிருந்து பணம் பெற்றதாகவே வழக்கை சி.பி.ஐ. குறுக்கி விட்டது. இதிலும் கூட, வெளிப்படையாகத் தெரிந்த ஆதாரங்கள்-சாட்சியங்களைக் கூட அது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

தமது கூட்டாளிகள் கட்சியின் தேர்தல் செலவுகளுக்காக ஹவாலா பணம் பெற்றிருப்பதை அர்ஜுன் சிங், திவாரி, பொம்மை, சரத் யாதவ் முதலானோர் வெளிப்படையாக ஒப்புக் கொண்ட போதிலும், அதை ஒரு சாட்சியமாக சி.பி.ஐ. முன்வைக்கவில்லை. பா.ஜ.க.வின் மதன்லால் குரானா முன்பு டெல்லி மாநில முதல்வராக இருந்தபோது, ஜெயின் சகோதரர்களின் பண்ணை வீடு வரை அரசு செலவில் தெருவிளக்குகள் அமைத்துக் கொடுத்தார். அதே சமயம் டெல்லியின் சேரிப் பகுதிகள் மின் விளக்கு வசதியின்றி இருளில் மூழ்கியிருந்தன. புகைப்படங்களு

**ஹவாலா நாயகனின் வீதி உலா: பரிசுத்த வேடங்கட்டி நாடெங்கும் யாத்திரை நடத்தும் அத்வானி.**





படிப்பகம்

www.padippakam.com

டன் இந்த உண்மைகள் வெளிவந்து நாறிய போதிலும், இவற்றை ஒரு சாட்சியாக சி.பி.ஐ. முன்வைக்கவில்லை. நீதிமன்றமும் இதைக் கண்டு கொள்ளவில்லை. அத்வானி, அர்ஜுன்சிங்க், திவாரி என அடுத்தடுத்து ஹவாலா நாயகர்கள் விடுதலையானதும் அரிப் முகம்மதுகான், பல்ராம் ஜாக்கர், சிவ சிங்கர் ஆகியோர் மீதான வழக்குகளை அமலாக்கத்துறை தள்ளுபடி செய்துவிட்டது.

"ஊழல்-மோசடிகள்; பல்லாயிரம் கோடி ஊழல்-மோசடிகள்! அவற்றை ஒழிக்க முடியாது; அவற்றுடன் அனுசரித்துப்போ! சாமர்த்தியம் இருந்தால் நீயும் சுருட்டிக் கொள்!" என்பதே இன்றைய கேடுகெட்ட அரசியலமைப்பின் நியதியாகிவிட்டது. இதில் சி.பி.ஐ.யும் உயர்-உச்ச நீதி மன்றங்களும் ஆளுங் கும்பலின் அரசியல் நோக்கங்களுக்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்டு எதிர்த் தரப்பினரைப் பழிதூற்றுவதும், பின்னர் பரஸ்பரம் நிரபராதிகளாக மார்தட்டிக் கொள்வதும் கோமாளிக் கூத்தாகத் தொடர்கிறது.

ஈராண்டுகளுக்கு முன்பு ஹவாலா மோசடி பற்றி பத்திரிகைகளில் மெதுவாகக் கசிந்தபோது, அரசும் சி.பி.ஐ.யும் இம்மோசடியை மூடிமறைக்க முயற்சிப்பதை எதிர்த்து வினீத் நாராயணன் என்ற பத்திரிகையாளர் உச்ச நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடுத்தார். தற்போதைய டெல்லி உயர்நீதி மன்றத் தீர்ப்பைப் பார்த்து, "கடந்த 50 ஆண்டுகளாக எந்தவொரு அரசியல்வாதி-அதிகாரி மீதும் சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டை நிரூபிக்கவோ-தண்டிக்கவோ சி.பி.ஐ. நடவடிக்கை எடுத்ததே கிடையாது. இதுதான் நியதி என்றாகிவிட்ட பிறகு, இந்தத் தீர்ப்பு வியப்புக்குரியதல்ல" என்று நாட்டின் ஒட்டுமொத்த அரசியலமைப்பே கேடுகெட்டு அழுகி நாறுவதை வேதனையுடன் குறிப்பிடுகிறார்.

இக்கேடுகெட்ட அரசியலமைப்பு சாக்கடையில் விழுந்து புரளும் ஒரு சொறிநாய் உடலை சிலிர்த்துக்கொண்டு "என்மீது நரகல் ஒட்டவில்லை" என்று பீற்றிக் கொள்ளுமானால், அதைவிட அற்பத்தனம் வேறெதுவும் இருக்க முடியாது. ஆனால் அத்வானியோ, நாட்டு மக்களை முட்டாளாகக் கருதிக் கொண்டு "நான் ஹவாலா கறைபடியாத யோக்கிய சிகாமணி" என்று நாடு முழுக்க வலம் வருகிறார்; ஊழல் எதிர்ப்பு உபதேசம் வேறு செய்கிறார். தனது இனப் பற்றோடு துக்ளக் "சோ", ஹவாலா வழக்குகளிலிருந்து அத்வானி விடுவிக்கப்பட்டதைப் பாராட்டி கூட்டம் நடத்தியதோடு, தனது பத்திரிகையிலும் அவருக்கு ஒப்பனை செய்கிறார். திருடன் கையில் கஜானா சாவியைத் தருவதுதான் சரியானது; பாலியல் வன்முறையை ஏவியவனுக்கே பெண்ணை மணமுடித்து வைப்பதுதான் பொருத்தமானது என்று இந்த கும்பல்கள் கூச்சநாச்சமின்றி நியாயப்படுத்தவும் கிளம்பிவிட்டன. நாட்டு மக்கள் இம்மோசடிகளை உணர்ந்து, புனிதர்களாக வலம் வரும் ஹவாலா கொள்ளையர்களை முச்சந்தியில் நிறுத்தி சவுக்கால் அடிக்க வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

● மனோகரன்

## காங்கோ உள்நாட்டுப் போர்

# ஊனமுற்ற விடுதலை

மத்திய ஆப்பிரிக்க நாடான ஜாய்ரேயில் கடந்த ஆறேழு மாதங்களாக நடந்து வந்த உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து, அந்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது; 1965 - ஆம் ஆண்டு தொடங்கி அந்நாட்டை ஆண்டு வந்த சர்வாதிகாரி மொபுடு ஸெஸெ ஸெகோ, ஏகாதிபத்தியங்களின் அறிவுரையின்படி நாட்டைவிட்டு வெளியேறிய பின்பு, "காங்கோ ஜாய்ரேயின் விடுதலைக்கான ஜனநாயக சக்திகளின் கூட்டமைப்பின்" தலைவரான லாரெண்ட் கபிலா அந்நாட்டின் புதிய அதிபராகப் பதவியேற்றுள்ளார்.

★ ★ ★

தற்பொழுது ஜாய்ரே என அறியப்படும் இந்த மத்திய ஆப்பிரிக்க நாடு, 1970 - க்கு முன்பு காங்கோ என அழைக்கப்பட்டு வந்தது. (1965 - ல் காங்கோவின் சர்வாதிகாரியாகப் பதவியில் அமர்ந்த மொபுடு, இந்நாட்டின் பெயரை ஜாய்ரே என மாற்றினார். தற்பொழுது அதிகாரத்தைக் கைப்பற்றிய கபிலா, இந்நாட்டின் பெயரை காங்கோ என மீண்டும் மாற்றியுள்ளார். இந்நாட்டிற்கு அருகிலேயே காங்கோ என்ற பெயர் கொண்ட மற்றொரு நாடும் உண்டு. இந்நாடு முன்னர் பிரெஞ்சு காலனியாக இருந்தது. இவ்விரு நாடுகளும் சுதந்திரம் அடையும் முன்பு "பெல்ஜியம் காங்கோ", "பிரெஞ்சு காங்கோ" என அழைக்கப்பட்டு வந்தன.) ஆப்பிரிக்க கண்டத்தின் மொத்த பரப்பில் 12 - ல் ஒரு பகுதியைக் கொண்டுள்ள காங்கோ, இயற்கை வளங்களோடு, யுரேனியம், தங்கம், வைரம், தாமிரம், நிலக்கரி போன்ற எண்ணற்ற கனிவளங்களும் நிறைந்த நாடு. கிட்டத்தட்ட எண்பது ஆண்டுகள் காங்கோவைக் காலனியாதிக்கம் செய்து வந்த பெல்ஜியம் ஏகாதிபத்தியம், அந்நாட்டின் இயற்கை கனி வளங்களைச் சூறையாடியதோடு, ஒரு கோடி முப்பது இலட்சம் பழங்குடி மக்களை அடிமைகளாக்கி, மேற்குலகச் சந்தையில் விற்றும் கொழுத்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஆசிய - ஆப்பிரிக்க கண்டத்து நாடுகளில் எல்லாம் பற்றிப் படர்ந்த தேசிய விடுதலைப் போராட்டம், காங்கோவில் குறிப்பிடத்தக்க பரிமாணத்தை அடைந்தது. ஆப்பிரிக்க கண்டத்தின் பிற காலனிய நாடுகளின் மக்களின் சுதந்திர வேட்கையைத் தட்டியெழுப்பும் வண்ணம், காங்கோவின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் நாடெங்கும் கொழுந்துவிட்டு எரிந்தது. இத்தேசிய விடுதலைப் போரை, பாட்ரைஸ் லுமும்பா தலைமையில் அமைந்த "காங்கோ தேசிய இயக்கம்" வழி நடத்தி வந்தது.

ஆப்பிரிக்க கண்டத்திற்கே கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்த இத்தேசிய விடுதலைப் போரை ஒழித்துக் கட்ட பெல்ஜியம் ஏகாதிபத்தியம் பல வழிகளில் முயன்றது. லுமும்பாவை விலை பேச முயன்று கரிபூசிக் கொண்ட பெல்ஜியம், அவரைச் சிறைக்குள் தள்ளியது. தனது கைக் கூலிகளைக் கொண்டு ஒரு பொம்மை அரசாங்கத்தை நிறுவி, விடுதலைப் போரை மழுங்கடித்துவிடச் சதித் திட்டம் தீட்டிய ஏகாதிபத்தியவாதிகள், இதற்காக 1960 - ஆம் ஆண்டு பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் வட்ட மேசை மாநாடொன்றைக் கூட்டினர்.

நவ காலனியாதிக்க நோக்கங்கொண்ட இச்சதித் திட்டத்தை, காங்கோவின் தேசியத் தலைவர்கள் அம்பலப்படுத்தி முறியடித்தனர். இதன்பின், பெல்ஜியம் ஏகாதிபத்தியத்திற்கும், காங்கோ தேசிய இயக்கத்திற்கும் இடையே ஒப்பந்தமொன்று கையெழுத்தானது. இதன்படி காங்கோ 1960 ஆம் ஆண்டு ஜூன் 30 - ஆம் நாளன்று சுதந்திரம் அடைந்தது.

பாட்ரைஸ் லுமும்பாவும் (வலது ஓரம்) அவரது இரு தோழர்களும் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் பெல்ஜியம் ஏகாதிபத்தியத்தால் கடத்தப்பட்டபொழுது எடுக்கப்பட்ட புகைப்படம்.




படிப்பகம்

www.padippakam.com



மொபுடுவிற்கும் (இடது ஓரம்) கபிலாவிற்கும் (வலது ஓரம்) இடையே அதிகார மாற்றத்திற்கு நடந்த முதல் சுற்று பேச்சு வார்த்தை. சுரங்கத் தொழிற்கழகங்களின் தரகனாக மண்டேலா (நடுவில்)

ஆனாலும் பெல்ஜியம் தனது திரை மறைவுச் சதி வேலைகளைத் தொடர்ந்து நடத்தி வந்தது. காங்கோ சுதந்திரம் அடைந்தபின் நடந்த பொதுத் தேர்தலில், தனது கைக்கூலிகளை நிற்க வைத்து அரசாங்கம் அமைத்துவிட முயன்றது பெல்ஜியம். எனினும் அப்பொதுத் தேர்தலில் லுமும்பா 90 சதவீத வாக்குகளைப் பெற்று காங்கோவின் பிரதமரானார். பெல்ஜியமோ காங்கோ நாட்டின் அதிபரான கஸவுபு மூலம் இளம் தேசிய அரசைக் கவிழ்த்துவிட முயன்றது.

இதேபொழுதில் காங்கோவின் இராணுவம் மற்றும் சிவில் நிர்வாக உயர் பதவிகளை வகித்து வந்து பெல்ஜியம் காலனியாதிக்கவாதிகளை எதிர்த்து காங்கோ நாட்டு இராணுவ வீரர்களும், பொது மக்களும் போராட்டத்தில் குதித்தனர். இப்போராட்டத்தை ஒடுக்க பெல்ஜியம் "பாரசூட்" மூலம் தனது துருப்புகளை காங்கோவினுள் இறக்கியது. காங்கோவின் இறையாண்மையைக் குழிதோண்டி புதைக்க முயற்சித்த இந்த இராணுவ நடவடிக்கையை, அமெரிக்காவும், பிரான்சும் ஆதரித்தன.

"பெல்ஜியம் இராணுவம் காங்கோவில் இருந்து வெளியேற வேண்டும்" என ஐ.நா. மன்றத்தில் லுமும்பா அரசு வைத்த கோரிக்கையை அமெரிக்கா ஏகாதிபத்தியம் எதிர்த்ததோடு, மேற்கு ஜெர்மனியில் இருந்து "நேடோ" படைகளை பெல்ஜியத்திற்கு ஆதரவாக அனுப்பி வைத்தது. மேற்குலகில் இருந்து கொலைகார கூலிப் படையினரும், கிரிமினல்களும் காங்கோவினுள் இரகசியமாகக் கடத்திச் செல்லப்பட்டனர். லுமும்பா உள்ளிட்ட தேசியத் தலைவர்களைப் படுகொலை செய்வது, இன மோதலைத் தூண்டிவிட்டு தேசிய விடுதலைப் போராட்டத்தைத் திசைதிருப்புவது என இக்கிரிமனல் கும்பல்களுக்குத் திட்டங்கள் தீட்டிக் கொடுக்கப்பட்டன. இச்சதியினை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணத்தை இக்கிரிமனல்கள் அமெரிக்கா மூலம் பெற்றுக் கொண்டனர்.

ஏகாதிபத்திய இராணுவ ஆக்கிரமிப்பு, சதிகளை காங்கோ நாட்டு மக்களின் துணையோடு எதிர்கொண்டு வந்த லுமும்பா அரசையும், காங்கோ நாட்டையும் பலவீனப்படுத்தும் நோக்கோடு, காங்கோவின் கனிவளங்கள் நிறைந்த கடுங்கா பிராந்தியத்தில் ஷோம்பே என்ற பெல்ஜியம் ஏகாதிபத்தியத்தின் தரகன் பதவியில் அமர்த்தப்பட்டான். காங்கோவை இரண்டாகக் கூறுபோடும் வண்ணம் கடுங்காவில் பிரிவினைவாதத்தை விதைத்தன, ஏகாதிபத்தியங்கள்.

காங்கோவின் தேசிய இராணுவம், அமெரிக்கா - பிரான்சு - பெல்ஜியம் ஏகாதிபத்தியங்களின் முக்கூட்டு தாக்குதலை எதிர்த்து முறியடிக்கும் வண்ணம் பலம் வாய்ந்ததாக இல்லை. மேலும், தேசிய இராணுவத்தினுள்ளும் ஏகாதிபத்தியங்கள் ஊடுருவி, மொபுடு போன்ற கைக்கூலிகளை உருவாக்கியிருந்தனர்.

இந்நிலையில், பெல்ஜியம் இராணுவத்தை காங்கோவில் இருந்து வெளியேற்றுவதற்கு சர்வதேச நாடுகளின் உதவியைக் கோரியது லுமும்பா அரசு. ஐ.நா.வில் காங்கோவின் இக்கோரிக்கைக்கு அமெரிக்கா காட்டிய எதிர்ப்பையும் மீறி, பெல்ஜியம் இராணுவத்தை வெளியேற்றும் தீர்மானம் நிறைவேறியது. ஐ.நா. தலைமையில் சர்வதேசப் படையொன்று, பெல்ஜியம் இராணுவத்தை வெளியேற்றும் பணிக்காக காங்கோவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால் இந்த சர்வதேசப் படை மறைமுகமான வழிகளில் ஏகாதிபத்தியங்களுக்குச் சார்பாக நடந்து கொண்டு, காங்கோ நாட்டு மக்களுக்கும், லுமும்பா அரசிற்கும் துரோகமிழைத்தது. பெல்ஜியம் இராணுவத்தினரை நிராயுதபாணியாக்கி வெளியேற்றத் தவறியதோடு, அதை எதிர்த்துப் போராடி வந்த காங்கோ தேசிய இராணுவத்திற்கு 'நடுநிலை' என்ற பெயரில், ஆயுத உதவி வழங்க மறுத்துவிட்டது. விமான நிலையங்கள், தகவல் - தொடர்புச் சாதனங்களைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்ட ஐ.நா. படை, அவற்றை லுமும்பா அரசு பயன்படுத்த விடாமல் தடுத்து, மக்களிடமிருந்தும், நாட்டின் பிற பகுதிகளிடமிருந்தும் மைய அரசைத் தனிமைப்படுத்தி ஏகாதிபத்தியங்களுக்கு உதவியது.

ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும், அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கும் தடையாக இருந்த லுமும்பாவைக் களையெடுத்துவிட அன்றைய அமெரிக்க அதிபர் ஐஸன்ஹோவர் மிகுந்த முனைப்புக் காட்டினார். லுமும்பாவை இராணுவக் கொட்டடியில் அடைத்துக் கொன்றுவிட ஏகாதிபத்தியங்கள் எடுத்த முதலிரண்டு முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. குறிப்பாக, சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் லுமும்பாவிற்கு கொடிய நஞ்சு கொடுத்துக் கொல்ல சதித் திட்டமொன்றைத் தீட்டிச் செயற்படுத்தியது. லுமும்பாவைக் கொன்றுவிட இரண்டாவது முறை போட்ட திட்டத்திற்கு, எட்டு லட்சம் பிராங்குகள் பாரிசிலிருந்து காங்கோவிற்குச் சென்றது.

> *காங்கோவில் ஏற்பட்டிருப்பது சமூக மாற்றமன்று; அரசியல் மாற்றந்தான். இந்த அதிகார மாற்றமும் ஏகாதிபத்தியங்களின் சம்மதத்தோடுதான் நடந்துள்ளது.*

மூன்றாவது சதித் திட்டம் 1960 - ஆம் ஆண்டு செப்டம்பரில் அரங்கேறியது. இத்திட்டத்தை நிறைவேற்ற மொபுடு மற்றும் காங்கோ அதிபர் கஸவுபு கும்பலுக்குத் தேவையான பணம், ஆயுத உதவி, கூலிப் படை அனைத்தையும் ஏகாதிபத்தியங்கள் வாரி வழங்கின. காங்கோ நாட்டுப் பாராளுமன்றம் சட்ட விரோதமாகக் கலைக்கப்பட்டு, கூலிப் படையால் முற்றுகையிடப்பட்டது. லுமும்பாவும் அவரது ஆதரவாளர்களும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட லுமும்பா ஏகாதிபத்தியக் கைக்கூலிகளால் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டார். அவரும், அவரது சக தோழர்கள் இருவரும் (காங்கோ செனட்டின் தலைவர் ஜோசப் ஒகிடோ மற்றும் பாதுகாப்புத் துறை மந்திரி மாரீஸ் ம்போலோ) உடலெங்கும் இரத்தக் காயங்களோடு, கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில், பெல்ஜியம் ஏகாதிபத்தியவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களை பெல்ஜியம் தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழிருந்த கடுங்கா பிராந்தியத்திற்கு கடத்திச் சென்றது. இச்சட்ட விரோதக் கடத்தலை, ஐ.நா. படையில் இருந்த சுவீடன் படைப் பிரிவு கைகட்டி வேடிக்கை பார்த்தது.

கடுங்கா பிராந்தியத்தில் தைஸ்வில்லி இராணுவக் கொட்டடியில் லுமும்பா அடைக்கப்பட்டார். அவரது தலைமுடியை மழித்து, அந்த மயிரையே தின்ன நிர்ப்பந்தித்து, மிகக் கீழ்த்தரமான சித்திரவதைகளை ஏவிவிட்டது பெல்ஜியம் ஏகாதிபத்தியம். தொடர்ச்சியான சித்திரவதையின் காரணமாக லுமும்பா, ஜோசப் ஒகிடோ, மாரீஸ் ம்போலோ மூவரும் இராணுவக் கொட்டடியிலேயே மரணத்தைத் தழுவினார்.

1961 - ஆம் ஆண்டு தொடக்கத்தில் லுமும்பா கொல்லப்பட்ட பின், அவரது சக தோழரான அந்தோணி கிஸங்கா காங்கோ தேசிய அரசின் தலைவரானார். அவரது அரசைக் கவிழ்த்து விடுவதற்கு அமெரிக்காவின் பண மூட்டைகள் முனைப்பாகக் களத்தில் குதித்தன. ஏகாதிபத்தியங்களின் தொடர்ச்சியான அரசியல் - இராணுவக் குறுக்கீடுகள், அரண்மனை அதிரடிப் புரட்சிகள் மூலம் மொபுடு 1965 - ஆம் ஆண்டு காங்கோவின் சர்வாதிகாரியாக முடிசூட்டிக் கொண்டான். மொபுடுவின் முப்பதாண்டு சர்வாதிகார ஆட்சியை அமெரிக்காவும், அதன் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வும், பன்னாட்டு சுரங்கத் தொழிற்கழகங்களும்தான் தாங்கி நின்றன.

அங்கோலா, மொசாம்பிக் உள்ளிட்ட ஆப்பிரிக்க கண்டத்தின் பல்வேறு நாடுகளில்


படிப்பகம்

www.padippakam.com

வெடித்து எழுந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு, சி.ஐ.ஏ. மொபுடுவைப் பயன்படுத்திக் கொண்டது. அங்கோலாவில் அமைந்த ரசிய சார்பு அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி வந்த ''யுனிடா'' கிளர்ச்சியாளர்களுக்கு மொபுடுவின் மூலமே ஆயுத உதவிகளை வழங்கியது, சி.ஐ.ஏ. மேலும், மொபுடுவின் மைத்துனர் ஹோல்டன் ராபர்டோ தலைமையில் ''அங்கோலோ விடுதலை தேசிய முன்னணி'' என்ற கூலிப் பட்டாளத்தையும் அமைத்தன, மேற்குலக ஏகாதிபத்தியங்கள். இக்காலக் கட்டத்தில் மேற்குலக கூலிப் பட்டாளங்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்காக 4500 கோடி ரூபாயை அமெரிக்கா மொடுபு அரசிற்குக் கொடுத்தது.

சொந்த நாட்டிலோ பத்து இலட்சத்திற்கும் அதிகமான டுட்ஸி இன மக்களின் அடிப்படை குடியுரிமைகள் அனைத்தும் மொபுடு அரசால் பறிக்கப்பட்டன. ஹுடு - டுட்ஸி இன மோதலைத் தூண்டிவிட்டு, தனது சர்வாதிகா ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வந்தார் மொபுடு. மொபுடுவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக 1970 - களில் வெடித்து எழுந்த மக்களின் போராட்டங்கள் பிரான்சு ஏகாதிபத்தியத்தின் உதவியோடு, மொராக்கா நாட்டுப் படைகளைக் கொண்டு இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டன.

மொபுடுவின் முப்பதாண்டு கால ஆட்சியில் காங்கோ நாட்டின் அந்நியக் கடன் 24,000 கோடி ரூபாயைத் தொட்டுள்ளது. அதேபொழுதில் சாதாரண இராணுவ வீரனாக வாழ்க்கையை நடத்தி வந்த மொபுடுவின் சொத்து மதிப்போ 18,000 கோடி ரூபாயை எட்டிப் பிடித்து விட்டது. சொந்த நாட்டு மக்கள் ஏகாதிபத்தியச் சுரண்டலாலும், பஞ்சத்தாலும், இன மோதலாலும் மடிந்து மக்கிப் போய்க் கொண்டிருந்த பொழுது, ஐரோப்பாவில் பண்ணை வீடுகளிலும், காங்கோ நதியில் சொகுசுப் படகுகளிலும் உல்லாசமாகப் பொழுதைக் கழித்த, வக்கிரம் நிறைந்த கொடுங்கோலன்தான் இந்த மொபுடு.

★ ★ ★

இரண்டாண்டுகளுக்கு முன்பு ருவாண்டாவில் டுட்சி இனத்தினர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது, காங்கோவில் இன மோதலும், உள்நாட்டுப் போரும் தீவிரமடையக் காரணமாய் அமைந்தது. ருவாண்டாவில் அதிகார மாற்றத்தின் பின், பத்து இலட்சத்திற்கும் அதிகமாக ஹுடு இன மக்கள் அகதிகளாக ஓடிவந்து, காங்கோவில் தஞ்சமடைந்தனர். ஹுடு இன அகதிகள் மத்தியில் இருந்து கூலிப் படையை உருவாக்கி, காங்கோ டுட்ஸி இனத்தினை ஒழித்து விட முனைந்தார் மொபுடு. இந்த இனத் தூய்மைப்படுத்தலுக்கு எதிராக கபிலா தலைமையில், டுட்ஸி இனத்தினரைப் பெரும் பான்மையாகக் கொண்ட படை உருவானது.

**பாட்டாளி வர்க்கக் கட்சி, அதன் தலைமை, வழி காட்டுதலின் கீழ் தேசிய விடுதலைப் போர் நடத்தப்படாத பொழுது அவ் விடுதலைப் போர் திசை மாறிப் போகும் அபாய முண்டு.**

கபிலாவிற்கு ருவாண்டாவும், புருந்தியும் ஆதரவளித்தன. மொபுடுவைக் காப்பதற்காக பிரான்சு ஏகாதிபத்தியம் செர்பியக் கூலிப் படையினரை அனுப்பி வைத்தது. எனினும் சொந்த நாட்டு மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போயிருந்த மொபுடுவின் சர்வாதிகார ஆட்சியை ஏகாதிபத்தியங்களால் காப்பாற்ற முடியவில்லை.

ரசிய - அமெரிக்காவினிடையே நடந்து வந்த பனிப்போர் முடிவுக்கு வந்த பின், மொபுடுவைக் கைகழுவிவிடச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியம், இந்த உள்நாட்டுப் போரைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. தென் ஆப்பிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவைத் தரகனாக்கிக் கொண்டு, கபிலா - மொபுடுவின் இடையே சமரச ஒப்பந்தமொன்றைத் திணித்தது. அது, ''மொபுடுவைக் கண்ணியமாக நாட்டைவிட்டு வெளியேற அனுமதிப்பது; அதிகாரத்தைக் கபிலாவிற்கு மாற்றிக் கொடுப்பது'' என்பதுதான் அச்சமரசத் திட்டம்.

எனவே, காங்கோவில் ஏற்பட்டுள்ள அதிகார மாற்றம் ஏகாதிபத்தியங்களின் சம்மதத்தோடுதான் நடந்துள்ளது. மேலும் கபிலா ஏகாதிபத்தியங்களின் பழைய விசுவாசிகளையும் தனது அரசாங்கத்தில் சேர்த்துக் கொண்டுவிட்டதால், அவரை ஏகாதிபத்தியங்கள் புதிய செல்லப் பிள்ளையாகத் தத்து எடுத்துக் கொண்டு விட்டன.

★ ★ ★

காங்கோவில் ஏற்பட்டிருப்பது சமூக மாற்றமன்று; அரசியல் மாற்றம்தான். ஆறு மாதங்களுக்குள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள கபிலா, ஏகாதிபத்திய எதிர்ப்பு - தேச விடுதலைத் திட்டத்தின் அடிப்படையில் தனது 'விடுதலை' இயக்கத்தைக் கட்டவில்லை; மாறாக, சர்வாதிகாரி மொபுடுவின் ஆட்சியால் அதிருப்தியுற்றிருந்த பெரும்பான்மையான மக்களின் உணர்வுகள், இன ஒதுக்கல் காரணமாக டுட்ஸி இன மக்களிடையே ஓங்கியிருந்த ஆத்திரம், மொபுடுவை எதிர்த்த எல்லைப்புற அரசுகளின் ஆதரவு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் மொபுடு கைவிடப்பட்ட சூழல் — இவற்றைப் பயன்படுத்திக் கொண்டுதான் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளார்.

கபிலாவின் இயக்கம் கட்டியெழுப்பியுள்ள படையும் இன ஒற்றுமையால் கட்டியமைக்கப்பட்ட மக்கள் விடுதலைப் படையல்ல. மாறாக, அப்படை டுட்ஸி இனத்தினரையே பெரும்பான்மையாகக் கொண்டிருப்பதால், ருவாண்டாவில் இருந்து தப்பி ஓடி வந்த அப்பாவி ஹுடு இன அகதிகளை நர வேட்டையாடுவது தடையின்றித் தொடர்கிறது. அகதி முகாம்கள் அழிக்கப்பட்டு, இலட்சக்கணக்கான ஹுடு இன அகதிகள் பட்டினியும் நோயுமாக விரட்டியடிக்கப்படுகின்றனர். இவையனைத்தும் ஹுடு இனத் தீவிரவாதிகளைக் களையெடுப்பது என்ற பெயரில் நியாயப்படுத்தப்படுகிறது.

காங்கோ அரசியலில் தேசிய விடுதலைப் போராளியாக அறிமுகமான கபிலா இன்று இனவாதியாகச் சீரழிந்து போயுள்ளார். இதன் காரணமாகத்தான், எந்த பன்னாட்டு சுரங்கத் தொழிற்கழகங்கள் மொபுடுவைத் தாங்கிப் பிடித்தனவோ, அவையே இன்று கபிலாவின் ஆட்சிக்கும் அங்கீகாரம் அளித்துள்ளன. இந்நிலையில் காங்கோவை அரித்துத் தின்னும் இனமோதல், அகதிகள், வறுமை போன்ற பிரச்சினைகளுக்கு மூல காரணமான ஏகாதிபத்திய சுரண்டலையும், மேலாதிக்கத்தையும் கபிலா அரசு முடிவுக்குக் கொண்டு வந்துவிடும் என எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத் தனமாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு - தேசிய விடுதலைப் போராட்டத்தில் தேசிய முதலாளிகளின் பாத்திரம் அவசியமானதெனினும், பாட்டாளி வர்க்கக் கட்சி - தலைமையின்கீழ் அவ்விடுதலைப் போர் வழி நடத்தப்படாதபொழுது, அவ்விடுதலைப் போர் திசை மாறிப் போவதும், சமரச - சரணடைவுப் பாதையில் சிக்கிக் கொள்ளும் அபாயமும் அதற்குண்டு என்பதையும் காங்கோ வரலாற்றின்மூலம் உணர்ந்து கொள்ளலாம்!

• ரஹீம்.

**அகதி முகாமில் இருந்து துரத்தப்படும் ருவாண்டா ஹுடு இன அகதிகள். ஆட்சி மாற்றம் ஹுடு - டுட்சி இனங்களிடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.**





படிப்பகம்

www.padippakam.com

## நக்சல்பாரிப் பேரெழுச்சி முப்பதாம் ஆண்டு நிறைவு தின விழா

# ★ பீதியில் ஆட்சியாளர்கள்
# ★ புதிய நம்பிக்கையில் மக்கள்

நக்சல்பாரி
நக்சல்பாரிகள்

— இந்தச் சொல்லுக்குச் சொந்தமான கிராமத்தையும், இந்தச் சொல் சுட்டிக்காட்டும் புரட்சியாளர்களையும் அறியாதவர்கள் இருக்க முடியாது. மேற்கு வங்க மாநிலத்தில், டார்ஜிலிங் மாவட்டத்திலுள்ள நக்சல்பாரி என்ற பெயர் கொண்ட அந்த சின்னஞ்சிறு கிராமத்தில்தான் 1967 ஆம் ஆண்டு, மே 23 - ஆம் தேதி நமது நாட்டின் விடியலுக்கான பூ ாளமொன்று பிறந்தது. ''உழுபவனுக்கே நிலம் ~ ழைப்பவனுக்கே அதிகாரம்'' என்ற அந்த பூபாள முழக்கம் பிறந்தவுடனேயே நாடெங்கும் எதிரொலித்தது. இந்த முழக்கத்தை ஏற்றுக்கொண்டு அதைச் செயற்படுத்தத் துணிந்தவர்கள்தான் நக்சல்பாரிகள்.

நாடாளுமன்றம், நீதிமன்றம், இராணுவம், போலீசு, நிலப்பிரபுக்கள், தரகு முதலாளிகள், ஓட்டுக் கட்சிகள், இடது - வலது போலிக் கம்யூனிஸ்டுகள் — அனைவரும் இந்த பூபாளத்திற்கு எதிராகத் திரண்டு நின்றனர். இந்தப் பெருச்சாளிகளை வீழ்த்துவதற்காகத்தான் நக்சல்பாரிகள் ஆயுதம் ஏந்தினார்கள். தங்களின் சுரண்டலும் அதிகாரமும் நக்சல்பாரி ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியால் தகர்ந்து வருவதைக் கண்ட ஆளும் வர்க்கங்கள், துப்பாக்கி குண்டுகளையும், அவதூறு சேற்றையும் ஒருசேர நக்சல்பாரிகள் மீது வாரியிறைத்தது.

ஆனால் நக்சல்பாரி மடியவில்லை; மடிந்தும் விடாது. நக்சல்பாரிப் பேரெழுச்சி இன்று முப்பது வயதைக் கடந்து விட்டது. யாரிடமிருந்து நக்சல்பாரிகளைப் பிரித்துத் தனிமைப்படுத்த விரும்பினார்களோ, அதே உழைக்கும் மக்கள் இன்று, புழுத்து நாறும் ஓட்டுக்கட்சி - நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு மாற்று நக்சல்பாரி அரசியல் பாதைதான் என உணரத் தலைப்பட்டுள்ளனர்.

முப்பதாண்டுகளுக்கு முன்பு இந்திய அரசியல் வானில் வசந்தத்தின் இடி முழக்கமாய் வெடித்தெழுந்த நக்சல்பாரிப் பேரெழுச்சி முன் வைத்த புதிய ஜனநாயகப் புரட்சிதான் இந்திய மக்களின் விடுதலைக்கான விடிவெள்ளி. இந்தியத் துணைக் கண்டத்தையே உலுக்கியெடுத்த இப்பேரெழுச்சியின் முப்பதாம் ஆண்டு நிறைவு தினத்தை நாடெங்கிலும் நக்சல்பாரிப் புரட்சியாளர்களும், மார்க்சிய - லெனினிய அமைப்புகளும் மே 23 ஆம் தேதி புரட்சிகர எழுச்சியுடன் கொண்டாடினர்.

தமிழ்நாட்டில் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி - இம்மூன்று புரட்சிகர அமைப்புகளும் இணைந்து நக்சல்பாரிப் பேரெழுச்சியின் முப்பதாம் ஆண்டு எழுச்சி நாளைக் கொண்டாடின. இதையொட்டி, நக்சல்பாரி எழுச்சியின் வரலாற்றை மக்களுக்கு நினைவூட்டும் முகமாக ''நக்சல்பாரி — புரட்சியின் இடி முழக்கம்'' எனும் சிறு வெளியீடு கொண்டு வரப்பட்டது. துண்டுப் பிரசுரங்கள், சுவரெழுத்துக்கள், சுவரொட்டிகள், பொதுக்கூட்டம், கலை நிகழ்ச்சிகள் மூலமும் தமிழ்நாடெங்கும் நக்சல்பாரி முப்பதாம் ஆண்டு எழுச்சிநாள் நினைவு கூறப்பட்டது; மே 23 ஆம் தேதி மாநிலம் தழுவிய அளவில் திருச்சியிலும், மே 31 ஆம் தேதி தருமபுரியிலும் நக்சல்பாரி எழுச்சி நாளைக் கொண்டாடும் முகமாக பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

### திருச்சியில்

மே 23 அன்று மாலையில், நக்சல்பாரி எழுச்சி நாள் பேரணி தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின், சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கியது. ஊர்வலத்தின் முன்னணியில் செஞ்சட்டை அணிந்திருந்த ஆண் - பெண் தோழர்கள் செம்படையினரைப் போல அணிவகுத்துச் சென்றனர். செம்பதாகைகளையும், மார்க்சிய ஆசான்களின் படங்களையும் ஏந்தி ஊர்வலத்தில் அணிவகுத்து வந்த ஆயிரக்கணக்கான தோழர்கள், ஊர்வலப் பாதையெங்கும் ''நக்சல்பாரி ஒன்றே பாதை'' என முழங்கினர்.

பேரணியின் முடிவில் உறையூர் - நாலு ரோடுப் பகுதியில் துவங்கிய பொதுக்கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் நள்ளிரவு தாண்டியும் நடந்தன. பொதுக்கூட்டத்திற்கு தொழிலாளர் பிரச்சாரக் குழுவைச் சேர்ந்த தோழர் தங்கராசு தலைமை தாங்கி, சமூக மாற்றத்திற்கு தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

தலைமை உரையின் பின், தோழர் கதிரவன் (மகஇக) நக்சல்பாரி தியாகிகளைப் பற்

**திருச்சியில் நக்சல்பாரிப் பேரெழுச்சியின் முப்பதாம் ஆண்டு நிறைவு தினவிழாவையொட்டி நடந்த பேரணியும் கலைநிகழ்ச்சியும்**







படிப்பகம்

www.padippakam.com

நியும், தோழர் செல்வராசு (விவிமு) புரட்சியில் விவசாயிகளின் பாத்திரம் குறித்தும், தோழர் ஜெயகாந்த் சிங் (புமாஇமு) மாணவர்களின் பங்கு குறித்தும், தோழர் வாணி (பெவிமு) பெண்களின் பங்கு குறித்தும், தோழர் மருதையன் (மகஇக) நக்சல்பாரிப் பாதையின் அரசியல் முக்கியத்துவம் குறித்தும் உரையாற்றினர். இதன்பின் ம.க.இ.க. மையக் கலைக் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது. கலை நிகழ்ச்சியின் இடையே, நக்சல்பாரிப் பேரெழுச்சி நிகழ்ச்சிகளை நாடகமாக வடித்து, நடித்துக் காட்டினர்.

### தருமபுரியில்

31.05.97 அன்று நக்சல்பாரி எழுச்சி நாள் விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பாக நடத்தப்பட்டது. வழக்கம்போல ஊர்வலத்திற்கும், கூட்டத்திற்கும் அனுமதி மறுத்த போலீசு, உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டு உத்தரவு கிடைத்தபின் மனதில்லாமல் அனுமதி வழங்கியது. மதியம் 4.00 மணிக்கு நாயக்கன் கொட்டாய் கிராமத்தில் அப்பு, பாலன் சிலைகளின் முன் தியாகிகளுக்கு நினைவஞ்சலி நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட வி.வி.மு. அமைப்பாளர் ஆம்பள்ளி முனிராசு தோழர் பாலனுடன் இணைந்து பணியாற்றிய நாட்களை நினைவு கூர்ந்தார்.

மாலை 5.00 மணிக்கு எழுச்சியான ஊர்வலம் தருமபுரி நகரில் 'நக்சல்பாரி ஒன்றே பாதை' என விண்ணதிர முழக்கமிட்டு மக்களுக்கு நம்பிக்கையூட்டியது. ஊர்வலத்தை தோழர் இராமலிங்கம் துவக்கி வைத்தார். பின்னர் துவங்கிய பொதுக்கூட்டம், கலை நிகழ்ச்சியுடன் நள்ளிரவு வரை நடந்தது. தோழர்கள் மனோகரன் (பு.மா.இ.மு), மோகன் (பு.மா.இ.மு.), மருதையன் (ம.க.இ.க.) சிறப்புரையாற்றினார்கள். 70, 80 களில் பல நக்சல்பாரித் தோழர்களை போலீசு மூலம் கொன்றழித்த ஆளும் வர்க்கம், நக்சல்பாரியின் வாரிசுகள் இன்று ஆயிரமாயிரமாய் அணிவகுக்கும் காட்சியைக் கண்டு மிரளும் சமயம், மக்களுக்கோ நமது எதிர்காலம் இவர்கள் மூலம்தான் என்ற நம்பிக்கையை தருமபுரி நிகழ்ச்சி ஏற்படுத்தியது.

தகவல்:
ம.க.இ.க. - வி.வி.மு. - பு.மா.இ.மு.

நக்சல்பாரிப் பேரெழுச்சி வெடித்த பொழுது அதை உறுதியாக ஆதரித்து நின்ற கல்கத்தாவில், நக்சல்பாரி முப்பதாம் ஆண்டு எழுச்சி நாள் புரட்சிகர எழுச்சியுடன் நடைபெற்றது. ஆந்திரா, பீகார், தண்டகாரண்யா என இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் கல்கத்தாவில் திரண்ட புரட்சியாளர்கள், அந்நகர வீதிகளில் பிரம்மாண்டமான ஊர்வலமொன்றை நடத்தினர். ஊர்வலத்தின் முடிவில் நடந்த பொதுக்கூட்டத்தில், 'மார்க்சிஸ்டு'களின் திருத்தல்வாதம் தோலுரிக்கப்பட்டது. உடல் நலம் தேறி வரும் ஆந்திர புரட்சிகரக் கலைஞர் கத்தார், எழுச்சி நாள் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு கலை நிகழ்ச்சிகளையும் நடத்தினார்.

# ஈழம்: சறுக்குப் பாதையில் புலிகளின் இராணுவவாதம்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவ ரீதியில் மட்டுமல்லாது, அரசியல் ரீதியிலும் சாதகமான, வலுவான நிலையை ஆளும் சந்திரிகா குமாரதுங்கே அரசு பெற்றுள்ள அதே சமயம், கடந்த ஜுன் 6-ந் தேதி திராவிடர் கழகத்தின் வீரமணி கும்பல் விடுத்திருந்த ஈழ ஆதரவு தமிழக முழு அடைப்பு தோல்வி கண்டுள்ளது அக்கறைக் குரியதாகும். விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையும் சரி, தமிழ்நாட்டில் ஈழவிடுதலைக்கு ஆதரவான உணர்வும் சரி இவ்வளவு கீழான நிலைக்கு கடந்த பத்தாண்டுகளில் போனது கிடையாது.

விடுதலைப் புலிகளுக்கும் அதிபர் சந்திரிகா அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை முறிந்து போனபிறகு, 1995 ஆம் ஆண்டு சிங்கள இராணுவம் துவங்கிய ''சூரியஒளிக் கதிர்'' இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ் தீபகற்பத்தைக் கைப்பற்றியது. யாழ் தீபகற்பத்திலுள்ள முக்கிய நகரங்களில் இருந்து புலிகள் பின்வாங்கிய போது, ஈழத்தமிழ் மக்கள் பெரும்பாலும் வெறியேறினர்; சிங்கள இராணுவமும் பேரிழப்புகளைச் சந்தித்தது; என்றாலும் யாழ் தீபகற்பத்தில் இருந்து புலிகளை விரட்டிவிட்டு, அப்பகுதியை ஆக்கிரமிப்பதில் வெற்றி கண்டது. இரண்டாவது கட்டமாக 1996 ஆம் ஆண்டு துவக்கிய இராணுவ நடவடிக்கையின் மூலம் இலங்கையின் வடபகுதியில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, பூநகிரி, வவுனியா போன்ற பிற நகரங்களைக் கைப்பற்றிய சிங்கள இராணுவம், விடுதலைப் புலிகளை வன்னிக் காடுகளுக்குள் விரட்டியது.

இதனால் விடுதலைப் புலிகள் கணிசமான அளவு பலவீனப்படுத்தப்பட்டனர். அவர்கள் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அதிகாரத்தைப் பிடித்து வைத்திருந்த பகுதிகளை இழந்ததோடு, கிரமமான போர் முறையில் இருந்து கொரில்லாப் போர் முறைக்குத் தள்ளப்பட்டனர். இது ஒரு பின்னடைவுதான் என்றாலும், பரந்த பகுதிகளை ஆக்கிரமித்துள்ள சிங்கள இராணுவத்தின் மீது கொரில்லாத் தாக்குதல்கள் நடத்தி அலைக்கழிப்பதில் புலிகள் கணிசமான வெற்றிகளை ஈட்டினர். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தாக்குதல் கடுமையானது. வட மாகாணத்தில் நகரங்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இராணுவத்திற்கு தேவையான பொருட்களை எடுத்துச் செல்வதையும் விடுதலைப் புலிகள் தடுத்து வந்தனர்.

சிங்கள இராணுவமோ தனது நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்வதிலும், புலிகளோடு அகதிகளாக வெளியேறிய தமிழ் அகதிகள் முகாம்களிலும், காடுகளிலும் அவதியுற்று, உள்முரண்பாடுகள் வெடிப்பதற்காகக் காத்திருக்கவும் செய்தனர். ''சிங்கள இராணுவம் முன்பு நடந்து கொண்டதைப் போல தமிழ்மக்கள் மீது படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் பலாத்காரத் தாக்குதல்களில் ஈடுபடுவதில்லை; மாறாக அவர்களின் நம்பிக்கையைப் பெற முயற்சித்து, அதில் வெற்றியும் கண்டு வருகிறது'' என்று இந்தியா உட்பட பல நாட்டுச் செய்தி தொடர்புச் சாதனங்கள் மூலம் பிரச்சாரம் நடந்தது.

புலிகளைப் பயங்கரவாதிகளாக ஏற்றுத் தமது நாடுகளில் ஒடுக்கவும், இலங்கைக்கு நேரடியான ஆயுத உதவி செய்யவும் இங்கிலாந்து உட்பட ஏகாதிபத்திய நாடுகளை முன்வரச் செய்வதிலும் அதிபர் சந்திரிகா அரசு வெற்றி பெற்றுவிட்டது. ஆனால் பதுங்கியிருக்கும் புலிகளைத் தேடிப்பிடிப்பது என்கிற பெயரில் ''அப்பாவித் தமிழர்களை வேட்டையாடுவதும், பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுவதும், புலிகளின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதிலடி என்கிற முறையில் தமிழ் சிவிலியன்களை கொன்றொழிப்பதும் தொடர்கிறது.

கடந்த வருடத்தில் மட்டும் 600-க்கும் மேற்பட்டவர்கள் யாழ் நகரிலிருந்து ''காணாமல் போயினர்'' என்று சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கை கூறுகிறது. சிங்கள இராணுவம் தனது அட்டூழியங்களை தொடர்வதாக ஈழத் தமிழினத் துரோகக் குழுக்களே அடிக்கடி குற்றஞ்சாட்டுகின்றன.

இதற்கிடையே அகதி முகாம்களிலும், காடுகளிலும் அவதியுறும் ஈழத்தமிழரில் கணிசமானோர் புலிகளின் அறிவுறுத்தலை மீறி வீடு திரும்புகின்றனர். புலிகள் அமைப்பும் தனது நிலையில் இருந்து இறங்கி வந்து மூன்றாவது தரப்பின் சமரசத்துக்கு இசைந்துள்ளனர். ஆனால் ''சிங்கள இராணுவம் வெறியேறிய பிறகே பேச்சுவார்த்தை'' என்ற புலிகளின் நிபந்தனையை அதிபர் சந்திரிகா ஏற்க மறுத்துவிட்டார். அதே சமயம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ, அரசியல் தாக்குதலை முன்னெடுக்கவும் சந்திரிகா அரசு விளைந்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக, யாழ்ப்பாணத்துக்கு தரைவழித் தடத்தை நிறுவும் உடனடி நோக்கத்தோடு ''ஜெயசிக்குரு - நிச்சய வெற்றி'' என்னும் இராணுவ நடவடிக்கையைக் கடந்த மே - 13 ஆம் தேதி சிங்கள இராணுவம் தொடுத்தது. இதன் நோக்கம் புலிகளின் பிடியில் இருந்து தமிழ் மக்களை ''விடுதலை'' செய்வது என்று சிங்கள இராணுவம் அறிவித்துள்ளது. வவுனியாவிலி



படிப்பகம்

www.padippakam.com




வவுனியா - கிளிநொச்சி நெடுஞ்சாலையில் விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள இராணுவத்துக்கும் சண்டை நடக்கும் இடம் (வட்டத்தினுள்)

ருந்து புறப்பட்டு ஓமந்தை நெடுங்கேணி, ஆகிய புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிறுநகரங்களைப் பலமுறை போரிட்டு சிங்கள இராணுவம் கைப்பற்றியுள்ளது. புலிகளிடமிருந்து வவுனியா முதல் கிளிநொச்சி வரையிலான நெடுஞ்சாலையின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதற்காகக் கடுமையாகப் போரிட்டு வருகிறது. இரு தரப்பிலும் பெரிய அளவு இழப்புகள் நேரிடுகின்றன. இடையே சிக்கிய தமிழ் மக்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். அவர்களில் பலர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை நோக்கித்தான் ஓடுகிறார்கள்.

புலிகளைப் பொறுத்தவரை யாழ் நகரைவிட்டு வெறியேறும்படி ஏற்பட்ட நிர்பந்தம் எவ்வளவு முக்கியத் திருப்புமுனையாக இருந்ததோ அதே போன்றுதான் இப்போது நடக்கும் போரும்; நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கும் தயார் என்று புலிகள் இறங்கிவந்திருப்பதாகத் தெரிகிறது. அதிபர் சந்திரிகா அரசுக்கு இது சாதகமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. இதைவிட முக்கியமாக சந்திரிகாவின் சுதந்திரக் கட்சியைவிட தீவிரமான சிங்கள இனவெறி கட்சி ஜெயவர்த்தன - பிரேமதாசாவின் ஐக்கிய தேசியக் கட்சி. இதனுடன் இணைந்து ஈழத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு - அதிகாரப் பகிர்வு என்னும் திட்டத்தை சந்திரிகா அரசு வகுத்துள்ளது. ஈழத்தமிழின துரோகிகளின் ஒரு பொம்மை ஆட்சியை நிறுவுவதும், அதிகாரப் பகிர்வு என்கிற பெயரில் அரசியல் மோசடி செய்வதும்தான் அந்த சதித்திட்டம். இதற்கும், ஈழத்தமிழின அழிப்புக்கும் சிங்கள இனவெறி அரசுக்குத் துணை நிற்கிறது பிரித்தானிய ஏகாதிபத்தியம்.

இந்த இராணுவ, அரசியல் தாக்குதலை எதிர் கொள்ளும் சக்தி விடுதலைப் புலிகளுக்குக் கிடையாது. தமிழ்தேசிய சுயநிர்ணய உரிமையை மையமாகக் கொண்ட திம்புக் கோரிக்கைகளை முன் வைத்து, அவற்றை ஆதரிக்கும் ஈழப் போராளிக் குழுக்கள் அனைத்தைதையும் ஜனநாயக ரீதியில் இயங்க விடுவதும், ஐக்கியப்படுவதும்தான் சிங்கள இனவெறி அரசுக்கு எதிரான அரசியல் மேலாண்மையைத் தரும். இத்தகைய அரசியல் அடிப்படையில்லாத புலிகளின் இராணுவ வாதம் ஈழத்தமிழர் விடுதலைக்கு ஒருபோதும் வழிவகுக்காது.

புலிகளின் ஆதரவாளர்களும், பினாமிகளும் இந்த உண்மையைக் காணமறுத்து ஈழப்பிரச்சினையில் இந்தியாவின் மத்திய, மாநில அரசுகள் தலையிட வேண்டும் என்று கோரி முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்தனர். பெயர்ப் பலகை அமைப்புகளும், செல்லாக் காசாகிப் போன கட்சிகளுமே இதை ஏற்று ஆதரித்தன. கருணாநிதி, மூப்பனார் கூட்டணிக்கட்சிகளும், போலி கம்யூனிஸ்டுகளும் தென்மாவட்டக் கலவரங்களைக் காரணங் காட்டி முழுஅடைப்புக்கான அழைப்பை நிராகரித்து விட்ட நிலையில் அது முழு தோல்வியடைந்ததை "வேடிக்கை" பார்க்கத்தான் முடிந்தது. இரயிலை மறிப்போம், பேருந்துகளின் "டயர்களை" வெட்டுவோம் என்றெல்லாம் சவடால் அடித்தனர் பா.ம.க. இராமதாசும், தி.க. வீரமணியும். ஆனால் திண்டிவனத்தில் இராமதாச தலைமையில் இரயில் மறியலுக்கு ஒரு 50- பேர் கூடத் திரளவில்லை. ஈழத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களிடையேயும் புலிகள் ஆதரவு மங்கி வருவதையே முழு அடைப்பின் முழுத்தோல்வி காட்டுகிறது.

இதற்குக் காரணம் ஈழத்தில் புலிகள் பின்பற்றும் ஜனநாயக விரோதப் பாசிசக் கொள்கையும், அதைத் தொடர்ந்து நியாயப்படுத்திவரும் தமிழ் நாட்டு ஆதரவாளர்கள், பினாமிகளின் கையாலாகத்தனமும்தாம். இந்தியாவில், மத்திய, மாநில ஆட்சிகளுக்கு எந்தக் கட்சி வந்தாலும் ஈழவிடுதலைக்கு எதிரான நிலையையே இதுவரை எடுத்து வந்திருக்கின்றன. ராஜீவ், எம்.ஜி.ஆர் ஆட்சியில் ஈழ ஆதரவு நாடகமாடி பிராந்திய ஆதிக்க மு.யற்சி நடந்தது. கருணாநிதி வெறும் வாய்ப் பிரச்சாரம் செய்து கொண்டு, பதவியைத் தக்க வைத்துக் கொள்வதே குறியாகி, மத்திய அரசின் உத்திரவுகளை விசுவாசமாக அமலாக்குகிறார். இந்த நிலையில் ஈழப்பிரச்சினையில் தலையிடும்படி புலிகளின் ஆதரவாளர்களும் பினாமிகளும் கோருவது இவர்களின் மலட்டுத் தனத்தையே காட்டுகிறது. புலிகளின் இராணுவ வாதப் பாசிசத்துக்கு மாறாக ஈழத்தமிழரின் நியாயமான ஜனநாயக கோரிக்கைகளை ஆதரித்தும், இந்திய ஆட்சியாளர்களின் ஈழ விரோத நடவடிக்கைகளை எதிர்த்தும் உறுதியான இயக்கங்கள் நடத்துவதன் மூலமே இந்தியத் தமிழர்களிடையே மீண்டும் ஈழ ஆதரவு உணர்வை மீட்க முடியும்.

● ஆர்.கே.

**இருதலைக் கொள்ளி எறும்பாய் ஈழத் தமிழர்கள்.**





படிப்பகம்

www.padippakam.com



## உலக வங்கி நடத்திடுவான் ஆந்திர அரசு நடந்திடுவான்

டெல்லி அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைத்த அசகாய சூரராகச் சித்தரிக்கப்படும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தனது மாநிலத்தின் பொருளாதார நெருக்கடியை உலக வங்கி உத்திரவின்படி தீர்க்கக் கிளம்பியுள்ளார். நலிவடைந்த அரசுத் துறை நிறுவனங்களால் பெருத்த நட்டம் ஏற்படுவதாகக் கூறிக் கொண்டு, ஆல்வின் ஆட்டோ, ரிபப்ளிக் போர்ஜ், ஆந்திர மீன் வளர்ச்சிக் கழகம் ஆகிய மூன்று அரசுத் துறை நிறுவனங்களை நாயுடு அரசு அண்மையில் மூடிவிட்டது. இவற்றில் பணியாற்றிய ஏறத்தாழ ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்து, எவ்வித நிவாரணமுமின்றி வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர்

இம்மூன்று நிறுவனங்களை மூடியது போதாதென்று, உலக வங்கி உத்திரவின்படி மொத்தமுள்ள 39 அரசுத் துறை நிறுவனங்களையும் மூடிவிட ஆந்திர அரசு தீர்மானித்துள்ளது. இவற்றில் பணியாற்றிவரும் 4 லட்சம் தொழிலாளர்களின் எதிர்காலம் இன்று கேள்விக்குறியாகி விட்டது. இவற்றில் மின்சாரம், போக்குவரத்து உள்ளிட்ட 13 அரசுத் துறை நிறுவனங்களை அடுத்து வரும் மாதங்களில் மூடிவிட்டு தனியார் முதலாளிகளிடம் ஒப்படைக்கப் போவதாக ஆந்திர அரசு அறிவித்துள்ளது. இது தவிர, உலக வங்கி உத்திரவுப் படி, உணவு மானியத்தைக் குறைக்கும் திட்டத்தின் கீழ் ரேஷன் அரிசி விலை ரூ.2.00 லிருந்து ரூ.3.50 ஆக உயர்த்தப்பட்டது. விவசாயிகளுக்கான மின்சார மானியத்தை நிறுத்தும் திட்டப்படி, மின்கட்டணம் ஒரு மடங்கு உயர்த்தப்பட்டது. மது விலக்குக் கொள்கை கிடப்பில் போடப்பட்டு மீண்டும் சாராயம் வெள்ளமாகப் பாய்கிறது. எள் என்றால் எண்ணெயுடன் நிற்கும் நாயுடு அரசின் விசுவாச சேவையினால் திருப்தி அடைந்துள்ள உலக வங்கி அதிகாரிகள், 3000 கோடி ரூபாய்க்கும் மேலாக கடன் திட்டங்களைக் கண்காணித்து மேற்பார்வையிடுகின்றனர். நீர்ப் பாசனம், விவசாயம், மின்சாரம், போக்குவரத்து, மீன்வளம், சுற்றுலா என பல்வேறு துறைகளில் உலக வங்கி இன்னும் 8000 கோடி ரூபாய்க்கும் மேலாக கடன் வழங்க முன்வந்துள்ளது.




**தொழிலாளர்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளும் நாயுடு அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் அரசுத் துறை தொழிலாளர்கள்.**

இத்தனைக்குப் பிறகும் நாயுடு கட்சியுடன் ஒட்டுக்கும் சீட்டுக்கும் கூட்டுச் சேர்ந்துள்ள 'இடது' - வலது போலிக் கம்யூனிஸ்டுகள், ''முதல்வர் சந்திரபாபு நாயுடு உலக வங்கியின் வலையில் விழுந்துவிட்டார். ஏகாதிபத்திய சக்திகளிடம் ஆந்திராவை விற்கக் கிளம்பிவிட்டார். எதிர்க்கட்சிகளைக் கலந்தாலோசிக்காமல் திசைவிலகிச் செல்கிறார்'' என்று புலம்புகின்றனர்.

## எரிமலையாகும் பனிமலை

மோசடித் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த காஷ்மீரின் பரூக் அப்துல்லா அரசு, வெகு வரைவிலேயே அரசு பயங்கரவாதிகளின் கைப்பாவை அரசுதான் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டது. காஷ்மீரில் 'ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு' நிறுவப்பட்ட பின்னரும்கூட அங்கிருந்து இந்தியக் கொலைவெறி பிடித்த இராணுவமும் துணை இராணுவப் படைகளும் வெளியேறவில்லை. மாறாக, முன்னைவிட அவற்றின் அதிக்கிரமங்கள் தீவிரமாகி விட்டன.

பரூக் அல்துல்லாவின் ஆட்சி அமைந்த கடந்த எட்டு மாதங்களில் மட்டும் 1897 பேர் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 141 குடியிருப்புப் பகுதிகள் இராணுவத்தால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, பாலியல் வன்முறைகளும், பெண்களைக் கடத்திச் சென்று கும்பலாக கற்பழிப்பதும் கணக்கிட முடியாத அளவுக்குப் பெருகி விட்டன. அரசு பயங்கரவாதிகள் அளிக்கும் பொய்ச் செய்திகளை மட்டுமே வெளியிட்டு வந்த 'தேசியப்' பத்திரிகைகள்கூட இராணுவத்தின் அட்டூழியங்களுக்கு - பாலியல் வன்முறை, கொட்டடிக் கொலைகள், சொத்துக்களைச் சூறையாடுவது முதலானவற்றுக்கு எதிராகக் கண்டனம் தெரிவித்துக் கட்டுரைகள் எழுதுகின்றன. கடந்த ஏப்ரல் மாத தொடக்கத்தில் காஷ்மீரின் பத்திரிகைகள் அனைத்தும் இராணுவத்தின் அட்டூழியங்களை எதிர்த்து தொடர்ந்து மூன்று நாட்களுக்கு பத்திரிகைகளை அச்சிடுவதையே நிறுத்தி வைத்து கண்டனம் தெரிவித்தன.

கடந்த ஏப்ரல் 24 அன்று வாலூசா கிராமத்தில் 7 பெண்கள் மீது ராஜபுதனா துப்பாக்கிப் படையினர் பாலியல் வன்முறையை ஏவியதை எதிர்த்து, அப்பகுதி வாழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். மறுநாள், அடுத்துள்ள கிராமத்தில் இரு பெண்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆனால் இவையெல்லாம் ஆதாரமில்லாத அவதூறுகள் என்று வடபகுதி இராணுவத் துணைத் தளபதி மறுக்கிறார். இராணுவக் கும்பலின் ஊதுகுழலாகச் செயல்படும் முதல்வர் பரூக் அப்துல்லா, ''இராணுவ அத்துமீறல்கள் பற்றி போலீசு நிலையத்தில் ஒரு வழக்குகூடப் பதிவாகவில்லை. இருப்பினும் மாநில அரசின் சார்பில் ஒரு மனித உரிமைக் கமிஷனை நிறுவி, அத்துமீறலில் ஈடுபடும் இராணுவத்தினரைத் தண்டிப்போம்'' என்று சவடால் அடிக்கிறார். சட்டமன்ற வரம்பிற்குள் இராணுவத்தை விசாரிக்கவோ, தண்டிக்கவோ அதிகாரம் கிடையாது என்பதால், முதல்வரின் மனித உரிமைக் கமிஷன் நிறுவும் மசோதாவை ''பல் பிடுங்கப்பட்ட பாம்பு'' என்று எதிர்க்கட்சிகள் நிராகரித்து விட்டன.

இந்நிலையில் கடந்த மே 12 - ந் தேதியன்று இந்திய அரசு பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடி வரும் அனைத்து கட்சிகளின் ஹுரியத் கூட்டமைப்பினர் காஷ்மீரில் தொடரும் இராணுவ அட்டூழியங்களுக்கு எதிராக டெல்லியில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். அதே நாளில் காஷ்மீர் மாநிலம் முழுவதும் கடையடைப்புப் போராட்டம் வெற்றிகரமாக நடந்தேறியது. காஷ்மீரில் ஒரு பொம்மை அரசை நிறுவியதன் மூலம் அம்மாநில மக்களைச் சாந்தப்படுத்தி விடலாம் என்று அரசு பயங்கரவாதிகள் மனப்பால் குடிக்கின்றனர். ஆனால் பனி மலை சூழ்ந்த அம்மாநிலமோ எரிமலையாகக் குமுறிக் கொண்டிருக்கிறது.

## என்ரானின் பகற் கொள்ளை - மறைக்கப்படும் உண்மைகள்

அரசுத் துறை நிறுவனமான எண்ணெய் - எரிவாயு கமிஷனின் (ONGC) பன்னா - முக்தா எண்ணெய் வயல்களை என்ரான் - ரிலையன்ஸ் கூட்டுப் பங்கு நிறுவனத்துக்குத் தாரை வார்த்ததன்



படிப்பகம்

www.padippakam.com



விளைவாக, இந்திய அரசுக்கு ஆண்டுக்கு 3000 கோடி ரூபாய்க்கும் மேலாக நட்டம் ஏற்படும் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மை அண்மையில் கசிந்துள்ளது.

நலிவடைந்த அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளை தனியார் முதலாளிகளுக்கு விற்கும் தாராளமய - தனியார்மயக் கொள்கையின்படி, ஈராண்டுகளுக்கு முன்பு பம்பாய் கடற்பகுதியிலுள்ள பன்னா - முக்தா எண்ணெய் வயல்கள் பன்னாட்டு நிறுவனமான என்ரான், இந்தியத் தரகுப் பெருமுதலாளி அம்பானியின் ரிலையன்ஸ் ஆகியவற்றுக்கு கூட்டுப் பங்கு நிறுவனமாக கையளிக்கப்பட்டது. அகழ்வு செய்யப்படாத எண்ணெய் வயல்களின் வளர்ச்சிக்காக மட்டுமே தனியாருடன் கூட்டுச் சேரலாம் என்ற நடைமுறையை மீறி, ஏற்கனவே அகழ்வுப் பணிமுடிந்து எண்ணெய் எடுக்கப்பட்டு வரும் பன்னா - முக்தா வயல்கள் என்ரான் - ரிலையன்சுக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளது.

இங்கு கிடைக்கு 'கச்சா எண்ணெயிலிருந்து குறைந்த கந்தகத் தன்மை கொண்ட பெட்ரோலியமாக வடித்தெடுக்கும் தொழில்நுட்பத்தை இந்திய விஞ்ஞானிகள் ஏற்கனவே பெற்றுள்ளனர். உற்பத்திக்கான வசதிகள் செய்து தரப்பட்டால் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை ஒரு பாரல் எட்டு டாலர் (ஏறத்தாழ ரூ.250) விலையில் பெற முடியும். ஆனால் இந்த வயல்களைக் கைப்பற்றியுள்ள என்ரான் - ரிலையன்சு நிறுவனங்கள், இதே தொழில்நுட்பத்துடன் எண்ணெயை சுத்திகரித்து மூன்று மடங்கு அதிக விலைக்கு (ஒரு பாரல் 24 டாலர் வீதம்) இந்திய அரசுக்கு விற்கின்றன. என்ரான் - ரிலையன்சு கூட்டு நிறுவனம் இந்தியாவில் கிடைக்கும் எண்ணெயை இந்திய விஞ்ஞானிகள் மூலமே சுத்திகரித்து, இந்திய அரசிடம் 3 மடங்கு அதிக விலைக்கு விற்பதன் மூலம், இந்தியாவுக்கு குறைந்தபட்சம் 3000 கோடி ரூபாய்க்கும் மேலாக இழப்பு ஏற்படும். சர்வதேச சந்தையில்கூட ஒரு பாரல் எண்ணெய் 20 டாலருக்கும் குறைவாகவே கிடைக்கிறது. அந்த வகையில் பார்த்தால் கூட என்ரானின் எண்ணெய் கொள்ளை விலைதான்! இதுதான் தனியார்மய - தாராளமயக் கொள்கையின் மகிமை!



என்ரான் நிறுவனத்தின் நில அளவை வரைபடத்தைக் கிழித்து, ஆர்ப்பாட்டம் செய்யும் கொங்கண் பிராந்திய மக்கள்.

கடந்த ஆண்டின் மத்திய கணக்கு - தணிக்கை அறிக்கையில் (CAG) இம்மோசடி கொள்ளை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திட்டக் கமிஷனின் முன்னாள் உறுப்பினரான அருண்கோஷ் என்பவரும் இதுபற்றி அரசிடம் முறையிட்டுள்ளார். இந்த விவகாரம் பற்றி ஆராய நாடாளுமன்ற துணைக் குழுவும் நிறுவப்பட்டது. மத்தியப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) அதிகாரிகளும் விசாரணைக்கு ஒப்புக் கொண்டனர். ஆனாலும் எந்த விசாரணையோ, நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை. அன்றைய சி.பி.ஐ. இயக்குனரான விஜய ராமராவும், மத்திய பெட்ரோலிய அமைச்சகமும் திட்டமிட்டே விசாரணையை முடக்கி வைத்தனர். இக்கொள்ளை பற்றிய ஆரம்ப விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்த உயரதிகாரியைப் பணிமாற்றம் செய்தனர். இப்போது என்ரான் வழியில், எண்ணெய் - எரிவாயு கமிஷனின் ரவ்யா, 'ரத்னா ஆகிய இரு எண்ணெய் வயல்களும் முறையே வீடியோகான், எஸ்ஸார் ஆகிய பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கப்பட உள்ளன. நாட்டை விற்று 'முன்னேற்றம்' காண கேடுகெட்ட இந்திய அரசியலமைப்பும் தயாராகவே உள்ளது.

## பன்னாட்டு நிறுவனங்களால் வாழ்விழந்த இந்நாட்டு மக்கள்

**ப**ன்னாட்டு நிறுவனங்களுக்குப் பாய் விரித்து வரும் இந்து வெறி ஆட்சியாளர்களின் கேடுகெட்ட கொள்கைகளால், மகாராஷ்டிர மாநில மக்கள் தமது சொந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டு அகதிகளாகி வருகிறார்கள். ரேவாஸ் - மந்த்லா பகுதியில் புதிய சர்வதேச விமான தளம், கொங்கண் பிராந்தியத்தில் குகாகரில் என்ரானின் புதிய மின் திட்டம், சிந்துதுர்க் மாவட்டத்தில் சுற்றுலாத் தளங்கள், இவை தவிர உலக வங்கி உதவியுடன் 12 மிகப் பெரிய வளர்ச்சித் திட்டங்கள் முதலான அந்நிய நிறுவனங்களின் வருகையால் இப் பகுதியிலுள்ள பல கிராம மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்படுகின்றனர். குறிப்பாக, கொங்கன் பிராந்தியத்தில் அன்ஜன்வெல், ரான்வி, வேல்டூர் ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்த 5000 க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் விரட்டியடிக்கப்பட்டு, ஏறத்தாழ 700 ஹெக்டேர் நிலம் என்ரான் திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிராந்தியத்தில் மட்டும் 8000 ஹெக்டேர் நிலம் தொழில் வளர்ச்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டு, அரசால் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

இதுபோல, என்ரானின் தாபோல் மின் திட்டம், இந்துஸ்தான் - ஓமன் பெட்ரோலிய நிறுவனம், லாயிட்ஸ் எ∴கு நிறுவனம், பூஷன் எ∴கு நிறுவனம், லண்டன் பாகி குழுமத்தின் தாமிர உருட்டாலை (ஸ்டெர்லைட் நிறுவனம் போன்றது) முதலான பன்னாட்டு நிறுவனங்களுக்காக குஹாகர் வட்டத்தில் 66 கிராமங்களிலுள்ள மக்கள் துரத்தியடிக்கப்பட்டு, நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இப்பிராந்தியத்திலுள்ள மக்கள் தமது நிலம், வீடு, வேலை வாய்ப்புகளை இழந்து அகதிகளாகி நிற்கிறார்கள். அதே நேரத்தில், கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஒரு சதுர அடி ரூ.5 வீதம் 90 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

உள்ளூர் மக்களின் எதிர்கால வாழ்வைப் பற்றி அக்கறையற்ற அரசு, இத்திட்டங்கள் பற்றிய தகவல்களைக்கூட மக்களுக்கு அறிவிக்காமல் இருட்டடிப்பு செய்து வருகிறது. ஏனெனில், மக்கள் இத்திட்டங்களைப் பற்றி அறிந்துவிட்டால், பின்னர் டூபான்ட், ஸ்டெர்லைட் நிறுவனங்களுக்கு எதிராக நடந்தது போல போராட்



படிப்பகம்

www.padippakam.com



டங்கள் தீவிரமாகி விடும் என்று இந்து வெறி ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர். ஆனால் விழிப்புணர்வு கொண்ட கொங்கன் பிராந்திய மக்கள் சுதேசி நாடகமாடும் இந்து வெறியர்களின் முகத்திரையைக் கிழித்தும், பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகவும், தமது வாழ்வுரிமைக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

## பழிவாங்கும் அரசியலில் கிழிந்துபோன 'சமூக நீதி'

உத்திர பிரதேச மாநிலத்தில் பாரதீய ஜனதா ஆதரவுடன் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவி மாயாவதி முதல்வரானதும், எதிர்க் கட்சியான சமாஜ்வாடி கட்சியினர்மீது பழிவாங்கும் வெறியோடு கொலை வெறியாட்டமும், கைதுகளும் தீவிரமாகி விட்டன. கடந்த இரு மாதங்களில் மட்டும், சமாஜ்வாடி கட்சியைச் சேர்ந்த 500 பேர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், 10,000 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழும், 3,000 பேர் மாபியா கும்பல் தடுப்புச் சட்டத்தின்கீழும் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். இதுதவிர, கூட்டணிக் கட்சிகளான பாரதீய ஜனதா - பகுஜன் சமாஜ் கட்சிக் குண்டர்கள், சமாஜ்வாடி கட்சி ஊழியர்கள் மீது கொலைவெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

மாயாவதி முதல்வராகப் பதவியேற்ற மார்ச் 22 - ஆம் தேதியன்று ராம் சேவக் யாதவ் என்ற பகுஜன் சமாஜ் கட்சிப் பிரமுகர் இரு சமஜ்வாடிக் கட்சி ஊழியர்களை லக்னோவில் சுட்டுக் கொன்றார். ஏப்ரல் முதல் வாரத்தில் வாரணாசியிலும், பாரா பாங்கியிலும் சமஜ்வாடி ஊழியர்கள் 4 பேர் உள்ளூர் பகுஜன் சமாஜ் எம்.எல்.ஏ.க்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 14 இல் மீர்ஜாபூரில் இரு சமாஜ்வாடி ஊழியர்களை பாரதீய ஜனதா கட்சியினர் அடித்துக் கொன்று தூக்கிலிட்டனர். கடந்த ஏப்ரல் இறுதியில், தமக்கு ஆதரவாகச் செயல்படாத வட்டார நிலவள வங்கித் தலைவரை எட்டாவா நகரில் பாரதீய ஜனதா குண்டர்கள் சுட்டுக் கொன்றனர். கடந்த மே 26 அன்று சமாஜ்வாடி எம்.எல்.ஏ.வான பராஸ்நாத் யாதவ், பகுஜன் சமாஜ் கட்சி எம்.எல்.ஏ.க்களால் ஏ.கே. 47 இரக துப்பாக்கியால் சுடப்பட்டார்.

இதுபோன்று கணக்கற்ற கொலைவெறியாட்டங்களைப் பட்டியலிட்டு சமாஜ்வாடிக் கட்சியினர் 'குடியரசு'த் தலைவரிடம் முறையிட்டு நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளனர். உள்துறை அமைச்சரிடம் மாநில ஆளுநரிடமும் சமாஜ்வாடி தலைவர் முலயம் சிங் முறையிட்டதன் பேரில் அவர்கள் மாயாவதியிடம் விளக்கம் கோரினர். மாயாவதியோ, கிரிமினல் ஒழிப்பு நடவடிக்கையின்படியும் சட்டப்படியும் தமது அரசு குண்டர்களைக் கைது செய்வதாகவும், பழிவாங்கும் போக்கு எதுவுமில்லை என்றும் திடலடியாக மறுக்கிறார். அதே சமயம் கொலைகாரர்களாக அம்பலப்பட்டு நிற்கும் பகுஜன் சமாஜ் - பாரதீய ஜனதா குண்டர்கள் மீது அவரது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், முலயம்சிங் ஆட்சியில் நடந்த 500 கோடி ஆயுர்வேத மருந்து ஊழலை விசாரிக்குமாறு சி.பி.ஐ.க்கு அங்கீகாரம் அளித்துள்ளார்.

முன்பு உ.பி.யில் முலயம் சிங் முதல்வராக இருந்தபோது, பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணியை முறித்துக் கொண்டு ஆட்சியைக் கவிழ்த்தபோது ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி அக்கட்சியினர் மீது தாக்குதலை ஏவிவிட்டார். அதற்குப் பழிவாங்கும் வெறியோடு இப்போது ஆட்சியைப் பிடித்துள்ள மாயாவதி, சமாஜ்வாடிக் கட்சியினரை வேட்டையாடுகிறார். முந்தைய ஆட்சியின் விசுவாச கிரிமினல் கும்பலுக்குப் பதிலாக, இப்போது புதிய ஆட்சியின் விசுவாச கிரிமினல் கும்பலின் ஆதிக்கம் அரசு எந்திரத்தின் ஆதரவோடு கொடிகட்டிப் பறக்கிறது. பிற்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் கூட்டணி, சமூக நீதி என்னும் மண்டல் ஆதரவாளர்களின் கொள்கைகள் உ.பி.யில் கிழிந்து கந்தலாகித் தொங்குகிறது.

## சி.ஆர்.பி. நிதி நிறுவன மோசடி! 1200 கோடியை விழுங்கிய அர்சத் மேத்தாவின் வாரிசு

மோசடியே மூலதனமாகக் கொண்ட இன்னுமொரு நிதி நிறுவனம் அண்மையில் 1200 கோடி ரூபாய்க்கும் மேலாக விழுங்கி ஏப்பம்விட்டு முதலீட்டாளர்களை ஏய்த்துள்ளது. சி.ஆர்.பி. எனப்படும் இந்நிறுவனம் மும்பையைத் தலைமையகமாகக் கொண்டு நாடு முழுவதும் பெரு நகரங்களில் தனது கிளைகளை விரித்துள்ளதோடு, ஹாங்காங்கிலும் ஒரு கிளையைக் கொண்டுள்ளது. நாட்டின் தரமான 10 நிதி நிறுவனங்களில் ஒன்று என்று புகழப்பட்ட இந்நிறுவனம், 3 லட்சம் முதலீட்டாளர்களை ஏமாற்றியதோடு, ஸ்டேட் வங்கி, யு.டி.ஐ., குஜராத் அரசு முதலீட்டு நிறுவனம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி முதலான அரசு வங்கிகளையும் சில வெளிநாட்டு வங்கிகளையும் ஏய்த்துப் பட்டை நாமத்தைப் போட்டுள்ளது.

இம்மோசடி நிதி நிறுவனத்தின் அதிபரும் சாதாரண கணக்குத் தணிக்கையாளருமான சி.ஆர். பன்சாலி, போலி ஆவணங்கள், போலி நிறுவனங்களின் பெயரால் முத்திரைத் தாள் தயாரிப்பதில் திறமைசாலி. இதையே மூலதனமாகக் கொண்டு சி.ஆர்.பி. நிதி நிறுவனத்தைத் தொடங்கி, பங்கு பத்திர வியாபாரத்தை நடத்தினார். பங்குச் சந்தையில் அடிமாட்டு விலைக்கு மொத்தமாகப் பங்குகளை வாங்கி, பின்னர் அர்ஷத் மேத்தா பாணியில் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி, கொள்ளை இலாபத்துக்குப் பங்குகளை விற்பதென்பது இவரது தொழில் உத்தி. இந்த அபரிமிதமான இலாபத்தைக் கண்டு வாயைப் பிளந்த நடுத்தர - மேட்டுக்குடி வர்க்கத்தினர் தமது சேமிப்புகளை இந்நிறுவனத்தில் கோடிக்கணக்கில் முதலீடு செய்தனர்.

போதாக்குறைக்கு, பங்கு பரிமாற்றங்களைக் கட்டுப்படுத்தும் ''செபி'', முறைகேடுகளைப் பற்றி ஈராண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்த போதிலும், நடவடிக்கை எடுக்காமல் சி.ஆர்.பி.யை. அங்கீகரித்து வந்துள்ளது. கடன் பகுப்பாய்வு - ஆராய்ச்சி நிறுவனம் (''கேர்'') இம்மோசடி நிறுவனத்துக்கு மிக உயர்ந்த ''ஏ+'' தகுதியை வழங்கியது. ரிசர்வ் வங்கியோ, இந்நிறுவனம் தனியே ஒரு வங்கியைத் தொடங்கி நடத்தலாம் எனச் சான்றிதழ் அளித்தது. இந்நிறுவனத்தின் கடன் பத்திரங்களுக்கு வரி விலக்கு அளித்தது. மேலும், நிதியமைச்சர் ப. சிதம்பரம், அரசியல் தரகர் சுப்பிரமணியசாமி, நரசிம்ம ராவின் மகன், தெலுங்கு தேச மத்திய மந்திரி ரேணுகா சவுத்திரி என எல்லா கட்சிகளிலுமுள்ள முக்கியப் புள்ளிகள் பன்சாலிக்கு நெருக்கமானவர்கள். ஸ்டேட் வங்கியின் முன்னாள் தலைவரான எம்.கே. சின்ஹா, இந்நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவர். அப்புறமென்ன? மோசடிகள் நாலு கால் பாய்ச்சலில் முன்னேறியது. ஏமாற்றப்பட்ட முதலீட்டாளர்களோ வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறுகிறார்கள்.

இப்போது சி.ஆர். பன்சாலியைக் கைது செய்தும், சொத்துக்களை முடக்கியும், இந்நிறுவனத்துடன் எந்த வங்கியும் தொடர்பு கொள்ளக் கூடாதெனக் கட்டுப்பாடு விதித்தும், சி.பி.ஐ. விசாரணைக்கு உத்திரவிட்டும் ஆட்சியாளர்கள் சூரத்தனம் காட்டி வருகின்றனர். ஆனால், அர்சத் மேத்தா விவகாரத்துக்குப் பிறகு எல்லாவற்றையும் முறையாகக் கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறிவரும்போதே, அடுத்தடுத்து மோசடிகள் வெளிவந்து நாறுகின்றன. தனியார் நிதி நிறுவனங்கள் மட்டுமல்ல; அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்தியன் வங்கியே கோடிகோடியாய் ஊழல் - மோசடியில் சிக்கி அம்பலப்பட்டுப் போயுள்ளது. இம்மோசடி நாயகர்களின் வழக்குகள் நத்தை வேகத்திலேயே நகருகின்றன. தனியார்மயம் - தாராளமயக் கொள்கையின் விளைவாக ஒட்டு மொத்த அரசியல் - பொருளாதார அமைப்பே ஊழல் - மோசடி - கிரிமினல்மயமாகிவிட்ட நிலையில், சி.ஆர்.பி. போன்ற மோசடி நிதி நிறுவனங்கள் உருவாவதை இனி தடுக்கவே முடியாது.



படிப்பகம்

www.padippakam.com




• தோழர் உஞ்சைராசன் அவர்களுக்கு பதிலளிக்கிறேன் என்ற போர்வையில் அம்பேத்கர் உட்பட யாரையும் நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களின் ஒட்டு மொத்த பிரதிநிதியாக கருதவில்லை என்று எழுதி உள்ளீர்கள். தாங்கள் தாழ்த்தப்பட்டவர்களின் ஒட்டு மொத்த மக்களின் பிரிதிநிதியாக பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களை எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னால் கருவறை நுழைவு போராட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் உருவப் படத்தை வைத்தது ஏன்? நீங்கள் இதழில் அளித்த பதில் தாழ்த்தப்பட்ட மக்களையும் அவர்களை விழிப்புணர்வு செய்த தலைவரையும் இழிவு படுத்தும் செயலாகும். இன்றைக்கும், என்றைக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அம்பேத்கர் அவர்களையும் தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களையும்தான் குறிக்கும். முன்னுக்கு முரணான செயலும் சொல்லும் மாறி மாறி போவதால் உங்கள் அமைப்பின் மீதும், தலைமையின் மீதும் சாதியரீதியான சந்தேகங்கள் எழ நிறைய வாய்ப்புள்ளது. உங்களின் அமைப்பு எவ்வளவு புரட்சிகர கருத்துக்களை வைத்திருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்தை தழுவாமல் இந்தியாவில் புரட்சி என்பதற்கே வழியில்லை. இந்தியாவில் ஒட்டு மொத்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வர்ணாசிரமத்திற்கு எதிரான போராட்டங்களை கையிலெடுத்து இந்த மக்களுக்கு சுயமரியாதையோடு நிமிர்ந்து நிற்க வழி வகுத்து கொடுத்தவர்கள் அம்பேத்கரும், தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களும்தான். வர்ணமா? வர்க்கமா? என்றால் முதலில் வர்ணாசிரமம் தான் ஒழிக்கப்பட வேண்டும். இந்தியாவில் ஒட்டு மொத்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வர்ணாசிரமத்திற்கு எதிரான போராட்டங்களை கையிலெடுத்து இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுயமரியாதையோடு நிமிர்ந்து நிற்க செய்த தலைவர்களை இழிவு படுத்தும் நிலையில் தாங்கள் அளித்த பதில், என்போல் உங்கள் இயக்கத்தின் அனுதாபிகளின் கசப்புணர்வை சம்பாதித்து கொள்ள நேரிடும். பாட்டாளி மக்களின் சிந்தனை மார்க்சிசம் என்றால், தாழ்த்தப்பட்டவர்களின் சிந்தனை அம்பேத்கரிசம்தான். எங்களின் ஒட்டு மொத்த தலைவராக அம்பேத்கர் அவர்களைத்தான் நினைக்கிறோம். அம்பேத்கர் மட்டும் இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தாவிட்டால் இந்த புரட்சி சிந்தனையை இந்த மக்களிடையே விரிவுபடுத்த முடியாது. ஐம்பது ஆண்டு காலம் ஆகியும் இன்னும் சாதி தீண்டாமை ஒழியவில்லை. முதலில் ஆங்காங்கே நடக்கும் தீண்டாமை கொடுமைக்கு எதிரான போராட்டங்களை முன் வையுங்கள்.

சாதிகள் ஒழிந்த பின் வர்க்க ரீதியான போராட்டங்கள் மக்கள் முன் எழுந்து நிற்கும். அப்போது மக்கள் எந்த ஒரு புரட்சிகர பாதையில் அணிவகுக்கலாம் என்ற தீர்மானத்தை கொள்ளட்டும். உங்கள் அமைப்பின் மேல் நல்ல எண்ணம் கொண்ட எங்களைப் போன்றவருக்கு இது போல எழுத்துக்கள் எங்களை வருத்தம் அடைய செய்கிறது. அம்பேத்கரைப் பற்றி தவறாகவோ திரிப்பு ரீதியாக கூறியோ தாழ்த்தப்பட்ட மக்களை அணுகுவீர்கள் என்றால் நிச்சயம் நீங்கள் புறக்கணிக்கபடுவீர்கள். ஆகவே இனிமேலாவது உங்களுக்கு உங்களிடம் இருந்து திரும்பி சென்ற தனிப்பட்ட நபர்களின் விருப்பு, வெறுப்புக்கு பதில் அளித்து கொள்ளுங்கள். தேவையில்லாததை எழுதி உங்கள் அமைப்பின் மேல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வெறுப்பு உண்டாகாத படி பார்த்து கொள்ளுங்கள்.

— வ. கென்னடி, பாபாசாகேப் அம்பேத்கர் இளைஞர் பொதுநல மன்றம், கே.எம். கார்டன்.

★ இது போன்று மேலும் இரு கடிதங்களும் வந்திருக்கின்றன. இக்கடிதங்களில் காணப்படும் கொஞ்சநஞ்சம் நாகரிகம் கூட இல்லாமல், ''தலித் அமைப்புகள்'' என்ற போர்வையில் ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்கள் ''புதிய ஜனநாயக''த்தின் மீது வசைமாரிப் பொழிவதாகவும், ''புதிய ஜனநாயக''த்துக்கு எதிராக ஏதாவது செய்யும்படி தாழ்த்தப்பட்ட இளைஞர்களைத் தூண்டி வருவதாகவும் அறிகிறோம். இவற்றின் நோக்கத்தையும் முயற்சிகளையும் தகுந்த முறையில் எதிர் கொண்டு முறியடிப்போம். அது வேறு விசயம். ''புதிய ஜனநாயக''த்திடம் இப்போது எழுப்பப்பட்டுள்ள கேள்விகளுக்கும் விமர்சனங்களுக்கும் நாம் ஏற்கனவே பதிலளித்துள்ளோம்.

அம்பேத்கர் நினைவு நாளையொட்டி ''புதிய ஜனநாயகம்'' எழுதிய விமர்சனங்களுக்கு மிகவும் கீழ்த்தரமான ஏச்சுக்களை எழுதியவர்களுக்குக் கூட பொறுப்பான பதிலளித்திருக்கிறோம். ஆனால் அவற்றை எதிர்கொள்ளும் திராணியற்றவர்கள் எப்போதும் ஒரே உத்தியைக் கடைப்பிடிக்கிறார்கள். அது இதுதான். அம்பேத்கரிசம், பெரியாரியம் ஆகியவற்றைப் புரட்சிகர அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சித்தாந்தங்களாக நாம் ஏற்கவில்லை. அவர்களைப் புரட்சிகர சமூகச் சிந்தனையாளர்களாகக் கூட நாங்கள் கருதவில்லை. அதே சமயம் அம்பேத்கரும் பெரியாரும் அவர்களுடைய காலத்தில் நாட்டிலேயே மிகச் சிறந்த சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர்களாக வாழ்ந்தார்கள் என்று மதிக்கிறோம். இப்படிச் சொல்வதால் தாழ்த்தப்பட்ட மக்களாலும், தமிழின மக்களாலும் நாங்கள் நிராகரிக்கப்படுவோம்; சமூக - சாதி ரீதியாகவும் இன ரீதியாகவும் எங்களுடைய பிறப்பைச் சந்தேகிக்க வேண்டி வரும் என்றெல்லாம் பூச்சாண்டி காட்டுவதும் மிரட்டுவதும் எங்களிடம் பலிக்காது. திராவிடக் கட்சிகளிடம் இருந்து கடன் வாங்கி, இந்த இழிவான, கீழ்த்தரமான உத்தியைப் பிரயோகிப்பது, கருத்துவகை ஒட்டாண்டித் தனத்தைத்தான் குறிக்கிறது. அம்பேத்கரிசம் பெரியாரியம் ஆகியவற்றின் மேலாண்மையை கருத்துவகையில் நிலைநாட்டும் துணிவும் தெளிவும் இல்லாதது மட்டுமல்ல; அம்பேத்கரிசம், பெரியாரியம் மீதே அவர்கள் நம்பிக்கையிழந்து அவற்றையே இழிவுபடுத்துவதாகும். இவர்களுடைய ஆசையும் முயற்சியும் எப்படிப்பட்டதாக இருப்பினும், நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே, அதை எதிர்த்துப் புரட்சிகர அரசியலுக்கும் சமூக மாற்றத்துக்கும் கணிசமான அளவு மக்களைத் திரட்டியுள்ளது ''புதிய ஜனநாயகம்'' தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

தாழ்த்தப்பட்ட, சூத்திர மக்களை இழிவுபடுத்தும் வகையில் தீண்டாமை - சாதி ஆதிக்கம் பாராட்டும் அதேசமயம்,



படிப்பகம்

www.padippakam.com

''அனைவரும் இந்து'' என்று கூறி பார்ப்பனப் பாசிச சக்திகள் பித்தலாட்டம் செய்து வருவதை முறியடிக்கும் நோக்கத்தோடு நடத்தப்பட்டது திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம். அதற்குரிய ஒரு அடையாளச் சின்னமாக - சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர்களான அம்பேத்கர், பெரியாரின் உருவப் படத்தைக் கருவறைக்குள் எடுத்துச் சென்றோம். இதன் பொருள் அவ்விருவரும் தாழ்த்தப்பட்ட, சூத்திர மக்களின் ஒட்டுமொத்த பிரதிநிதிகள் என்பதல்ல! அப்புறம் இந்த வாசகர் உட்பட சிலர் ''புதிய ஜனநாயகம்'' எப்படி, எந்த அடிப்படையில் செயல்பட வேண்டும், சாதி - வர்க்கப் பிரச்சினையை எப்படி அணுக வேண்டும் என்றும் அறிவுறுத்தும், எச்சரிக்கும் போதனைகள் வழங்கி வருகின்றனர். அம்பேத்கரிசம், அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அவர் ஆற்றிய பணிகளாக இவர்கள் கூறுவதெல்லாம் மிகைப்படுத்தி இட்டுக்கட்டப்பட்டவைதாம் என்பதை நாம் சொல்லியே தீரவேண்டியுள்ளது. இப்படிச் சொல்லுவதால் அம்பேத்கரையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் நாம் இழிவுபடுத்துகிறோம் என்று அவதூறு செய்யப்படுகிறது. ஆனால் உள்ளதைச் சொல்வதன்மூலம் அம்பேத்கருக்கேகூட உண்மையாகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விசுவாசமாகவும் நடப்பதாகத்தான் ''புதிய ஜனநாயகம்'' கருதுகிறது.

''பாட்டாளி மக்களின் சிந்தனை மார்க்சிசம் என்றால் தாழ்த்தப்பட்ட மக்களின் சிந்தனை அம்பேத்கரிசம்தான்'' என்றும், வர்ணாசிரமத்திற்கு எதிரான போராட்டத்தைக் கையிலெடுத்துத் தாழ்த்தப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி சுயமரியாதையோடு நிமிர்ந்து நிற்கச் செய்தவர், அம்பேத்கர் என்றும் ஐம்பதாண்டு காலமாகியும் இன்னும் சாதி தீண்டாமை ஒழியவில்லை, அம்பேத்கரிசம் மூலம்தான் அதை ஒழிக்க முடியும் என்றும் கூறுகிறார்கள்.

ஐயா, அறிவுரையாளர்களே, தயவுசெய்து எங்களுக்குச் சொல்லுங்கள்! இந்த நாட்டின் வருணாசிரம - சாதிய, தீண்டாமையை ஒழிப்பதற்காக அம்பேத்கர் முன்வைத்த தீர்வு - வழிவகைகள்தாம் என்ன? அவை எப்படிப் புரட்சிகரமானவை? அப்படி வருணாசிரம - சாதிய, தீண்டாமை ஒழிப்புக்குப் பிறகு அவர் அமைத்திட எண்ணியிருந்த சமூக - அரசியல் - பொருளாதார அமைப்புக்கான திட்டம்தான் என்ன? எங்களுடைய அறிவுக்கெட்டியவரை, ஆளுவோரிடம் பேரங்கள், வாதங்கள் நடத்தி இட ஒதுக்கீடு போன்ற சட்டத் திருத்தங்கள் பெற்று தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு மூலம் பொருளாதார சமூக நிலைமையை மேம்படுத்தினால் சாதிய தீண்டாமைக் கொடுமைகள் தீருவதற்கான சூழ்நிலை தானே உருவாகும்; கூடவே ''மதமாற்றத்தின்'' மூலம் இந்து - வருணாசிரம அமைப்பில் இருந்து விடுபடலாம் - இதுதான் அம்பேத்கர் முன்வைத்துப் போராடிய தீர்வு - வழிவகை. ''தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் அதிகாரம் வேண்டும்'' என்று ஓரிடத்தில் அவர் பேசியதாகச் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். இது ஒன்றும் பாரிய நோக்கத்தில் பேசியதில்லை. அப்படி இருந்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகாரத்தைப் பெறுவது எப்படி என்றெல்லாம் பேசியதாக, முயன்றதாக எங்கும் இல்லையே! அவர் சிந்தனையெல்லாம் இட ஒதுக்கீடு, இரட்டை வாக்குரிமை, சட்ட இயற்றம்தானே! அது மட்டுமல்ல, மொழி, இனம், ஆரிய - திராவிடப் பூர்வீகம், ஆரியக் குடியேற்றம், அரசியல் - பொருளாதார அமைப்பு, மதம் - பண்பாடு ஆகிய பல்வேறு பிரச்சினைகளிலும் அம்பேத்கர் சரியான சிந்தனையைக் கொண்டிருந்ததாகக் காட்ட முடியுமா?

ஒன்று, தாழ்த்தப்பட்ட மக்களை அமைப்பாகத் திரட்டி அதன் தலைவர் என்கிற முறையில் பிரதிநிதித்துவ உரிமை பாராட்டலாம்; அல்லது அரசியல் - சித்தாந்த வகையில் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கு அறிவியல் பூர்வமாகத் திட்டம், தீர்வு, வழிவகை வைத்திருக்க வேண்டும். இரண்டுமே இல்லாதபோது எப்படி தாழ்த்தப்பட்ட மக்களின் ஒட்டுமொத்தப் பிரதிநிதியாக அவரை ஏற்க முடியும்?

• *மதவாத சக்திகளின் பிடியில் அரசு எந்திரம் சிக்கிவிடக் கூடாது என்ற நோக்கத்தில்தானே நாங்கள் (சி.பி.எம்.) ஐக்கிய முன்னணி அமைத்துள்ளோம். மதவாதத்தை எதிர்க்கும் நீங்கள் அதற்கு ஆதரவு தருவதுதானே முறை?*

*— பாரதி, பொன்னேரி.*

★ நீங்கள் உங்கள் கட்சிக்குப் புதிதாகச் சேர்ந்தவரா, அல்லது ஞாபக மறதிக்காரரா என்று தெரியவில்லை. சி.பி.எம். கட்சி நிறுவிய பிறகு, அது 1967 இல் முதல் பொதுத் தேர்தலைச் சந்தித்தது. அப்போது காங்கிரசு ஆட்சி மீண்டும் தொடரக்கூடாது என்ற காரணத்தைக் கூறி, மேற்கு வங்கத்தில் பதவிப் பித்தர் அஜாய் முகர்ஜியின் போட்டிக் காங்கிரசுடனும், தமிழ்நாட்டில் இராஜாஜியின் சுதந்திராக் கட்சியுடனும், கேரளத்தில் முஸ்லீம் லீக்குடனும், பஞ்சாபில் ஆர்.எஸ்.எஸ். - இன் அப்போதைய அரசியல் கட்சியும் பாரதீய ஜனதாவின் ஆரம்ப அவதாரமுமான ஜனசங்கத்துடன் கூட்டணி அமைத்தது. அகாலி, ஜனசங்கத்துடன் கூட்டணி ஆட்சி அமைக்கவும் போனது. அப்புறம், எப்போதும் இதே பாணி அரசியலை விடாமல் பிடித்துக் கொண்டுவிட்டது, உங்கள் தலைமை. தமிழ்நாட்டில் யார் அதிக நாற்காலிகள் தருகிறார்களோ (எம்.ஜி.ஆர், கருணாநிதி இருவரில்) அவருடன் ஒட்டிக் கொண்டு மாறிமாறி கூட்டணி அமைத்தபோதும் ''அவர் ஆட்சிக்கு வரக்கூடாதென்று இவரிடம் கூட்டு, இவர் ஆட்சிக்கு வரக்கூடாதென்று அவரிடம் கூட்டு'' என்பதே சி.பி.எம். கொள்கையாக இருந்து வருகிறது. போதாக்குறைக்கு இந்த இசை நாற்காலிப் போட்டியில் அடிக்கடி மோதிக்கொண்டு கூட்டணியில் இடம் பிடிக்க முடியாமல் இரண்டு ''கம்யூனிஸ்டு'' கட்சிகளும் அனாதரவாக நின்றுவிடும்போது ''சித்தாந்த'' விளக்கம் தருவதும் உண்டு.

இந்திரா காங்கிரசைப் பிளவுபடுத்தியபோது, மொரார்ஜி தலைமையிலான பிற்போக்கு சிண்டிக்கேட்டை முறியடிப்பதாகக் கூறிக்கொண்டு நாடாளுமன்றத்தில் சிறுபான்மை இந்திரா அரசையும், அரசுத் தலைவர் பதவிக்கு அவர் நிறுத்திய வி.வி. கிரியையும் சி.பி.எம். ஆதரித்தது. அப்புறம் 1977 இல் இந்திரா காங்கிரசு ஆட்சிக்கு வந்துவிடக் கூடாதென்று கூறி அதே மொரார்ஜி தலைமையில், ஆர்.எஸ்.எஸ். மதவாதிகள் இணைந்த ஜனதாக் கட்சி ஆட்சியை ஆதரித்தது. அதன்பிறகு காங்கிரசு, பாரதீய ஜனதா இரண்டுமே ஆட்சிக்கு வருவதை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு ஜனதாவின் ஏதாவது ஒரு அவதாரத்தை ஆதரிப்பதே சி.பி.எம். மின் அரசியல் யுத்த தந்திரமாகிவிட்டது. ஆனால் இப்படிச் செய்யும்போது காங்கிரசு அல்லது பாரதீய ஜனதாவின் தயவில்தான் ஜனதா அவதாரங்கள் - ஐக்கிய முன்னணிகள் இருந்து வருகின்றன. இது சாராம்சத்தில் காங்கிரசு அல்லது பாரதீய ஜனதாவுடன் சி.பி.எம். மறைமுகக் கூட்டு வைப்பதாகவே உண்மையில் அமைகிறது.

மொத்தத்தில், சி.பி.எம். கட்சி உருவானதில் இருந்து அது பின்பற்றும் சந்தர்ப்பவாத ஐக்கிய முன்னணித் தந்திர அரசியல் அக்கட்சியை நாடாளுமன்ற ஜனநாயகம் என்னும் செக்கை இழுக்கும் மாடாகத்தான் வளர்த்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியவில்லையா? அதாவது, புரட்சிக் கட்சி என்று சொல்லிக் கொள்ளும் சி.பி.எம்., ''வலதுசாரிகளிடம் இருந்து நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு ஆபத்து'' என்று கூச்சலிட்டுக் கொண்டு, ''நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பது'' என்கிற ''புனித''க் கடமையின் காவலனாகச் செயல்படுகிறது. இது



படிப்பகம்

www.padippakam.com

ஆளும் வர்க்கத்துக்குக் கொண்டாட்டமாக இருக்காதா? அதாவது, நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை அம்பலப்படுத்தி, நாடாளுமன்ற அராஜக அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி, அந்த அமைப்பைத் தகர்த்து மக்கள் ஜனநாயகத்தை நிறுவும் புரட்சிக்கான பிரச்சாரத்தைக்கூட மேற்கொள்ளாமல், நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தைக் காக்கும் வேலையை ஒரு ''கம்யூனிஸ்ட் - மார்க்சிஸ்டு'' கட்சியே செய்கிறது என்றால் அதைவிடச் சிறந்த ஆளும் வர்க்க சேவை என்னவாக இருக்கும்?

இது ஒருபுறமிருக்க நாடாளுமன்ற அரசியல் என்னும் நச்சுச் சுழலில் சிக்கிக்கொண்டுவிட்ட சி.பி.எம். - க்கு ஐக்கிய முன்னணியில் பங்கேற்பது தவிர வேறு வழியோ, வகையோ ஏதும் கிடையாது. மேற்கு வங்கம், திரிபுராவைத் தவிர கேரளாவில் கூட அறுதிப் பெரும்பான்மை பெறவே முடியாத, வேறு எந்த மாநிலத்திலும் காலூன்ற வக்கற்ற சி.பி.எம். கட்சி ஒரு தேக்கநிலையை எட்டிவிட்டது. இப்போது இருப்பதைவிடக் கூடுதலாக ஒரு ஐந்து எம்.பி.க்களைக் கூட அக்கட்சி பெறவே முடியாது. இவ்வாறு சி.பி.எம். தலைமையிலான இடதுசாரிக் கூட்டணி மத்தியில் ஆட்சிக்கு வருவதற்கான கனவுகூடக் காண முடியாத நிலையில், அக்கட்சி ஐக்கிய முன்னணி போன்ற சந்தர்ப்பவாதக் கூட்டணி சேருவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? ஆனால் இதையே ஒரு திட்டமிட்ட கொள்கையின் அடிப்படையிலான முடிவென்று உங்களைத் தலைமை ஏமாற்றுகிறது.

அப்புறம், அரசாங்கம், அரசு எந்திரம் பற்றிய குழப்பமும் உங்களிடம் நிலவுகிறது. அரசாங்கம் அமைப்பவர்களின் பிடியில் அரசு எந்திரம் சிக்கிவிடும் என்கிறீர்கள். அப்படியானால் சி.பி.எம். கூட்டணி ஆளும் மாநிலங்களில் எல்லாம் அரசு எந்திரம் அதன் பிடியில் இருக்கிறதா? அப்புறம் உங்கள் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றுவதற்கு என்ன தடை? யார் ஆட்சிக்கு வந்தாலும் மாறாமல் ஆளும் வர்க்க நலன்களின் அடிப்படையில் கட்டி அமைக்கப்பட்டிருப்பதுதான் அரசு எந்திரம். எந்த நலன்களுக்காக அரசு எந்திரம் உள்ளதோ அவற்றுக்கு எதிராகப் போகாதவரை அரசாங்கமும் அரசு எந்திரமும் இசைந்து செயல்படுகின்றன. அவற்றுக்கு எதிராக எந்த அரசாங்கம் செயல்பட்டாலும் அது தூக்கி எறியப்படும். அந்த வகையில் உங்களது அரசாங்கம் ஆளும் வர்க்கத்தின் அடிப்படை நலன்களுக்கு எதிராகப் போவதில்லை. எனவே அதை அரசு எந்திரம் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆகவே ஆளும் வர்க்க நலன்பேணும் அரசு எந்திரத்துக்கு இசைவாக அரசாங்கத்தை நடத்திவரும் சி.பி.எம்., மதவாத சக்திகளின் பிடியில் அரசு எந்திரம் சிக்கிவிடக் கூடாது என்கிற நோக்கத்தில் செயல்படுவது இன்னுமொரு எதிர்மறை அரசியல்தான். அதாவது, இந்த அரசு எந்திரத்தைத் தகர்த்து பாட்டாளிகளின் தலைமையிலான புதிய அரசு எந்திரத்தைக் கட்டவேண்டியதன் அவசியத்தைப் பிரச்சாரம் செய்து, தயாரிப்பதற்குப் பதில் ஏற்கனவே உள்ள அரசு எந்திரம் யார், யாருடைய பிடியில் சிக்கிவிடக் கூடாது; சிக்க விடாமல் அதைக் காத்திடவேண்டும் என்கிற எதிர்மறை அரசியலை சி.பி.எம். நடத்திக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் Status Quoist - மாறாநிலைவாதக் கட்சியாகிவிட்டது என்பதை நீங்கள் உணர வேண்டும். அடுத்து, மதவாத சக்திகள் - பாசிச சக்திகளாகவும் உள்ளனர். பாசிச மதவாதிகளை நாடாளுமன்ற அரசியல் தந்திரங்களால் முறியடித்திட முடியாது. நேரடியாக களத்தில் இறங்கி தற்காப்பு - தாக்குதல் படைவரிசையைக் கட்டிச் செயல்படுத்துவதன் மூலமே முறியடிக்க முடியும். இல்லை என்றால் பாட்டாளி வர்க்க அணிகளே தம்மைக் காத்துக்கொள்ள அரசு எந்திரத்தின் தயவை நாடித் தஞ்சமடைவதைத் தவிர வேறு வழி இல்லை.

■ ■ ■

## "வாழ மட்டுமா? செத்தாலும் வழியில்லை!" மயானம் - மயானப் பாதை கோரி ஆர்ப்பாட்டம்

பெரம்பலூர் - திருவள்ளுவர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயங்கொண்ட சோழபுரம் காந்தி நகர் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மயானமும், மயானப் பாதையும் கோரி புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி 14.05.97 அன்று பேரணியும், வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டமும் நடத்தியது. கடந்த பல ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் இக்கோரிக்கைக்காகப் போராடி வந்தாலும், அதிகார வர்க்கம் அசைந்து கூட கொடுக்கவில்லை. அதேசமயம், அந்த அப்பாவி மக்களிடம் இலஞ்சம் வாங்கி ஏய்த்து வந்துள்ளது. முன்பு அந்நகரில் வட்டாட்சியராக இருந்த வடமலை ராஜ், "போராடினால் துப்பாக்கியால் சுடுவேன்" என மிரட்டியிருக்கிறான்.

இந்நிலையிலும் பு.மா.இ.மு. தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் அப்பகுதி மக்கள் கிட்டத்தட்ட நூறுபேர் உற்சாகத்தோடு கலந்து கொண்டனர். பேரணி முடிந்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் அதிகாரிகள் இலஞ்சம் பெற்றதையும், மிரட்டியதையும் அவர்கள் அம்பலப்படுத்திப் பேசினர். ஆர்ப்பாட்ட முடிவில் பேச்சு வார்த்தைக்கு அழைத்த வட்டாட்சியரிடம், "இனியும் தாமதித்தால் இதைவிடத் தீவிரமாகப் போராட்டத்தை முன்னெடுப்போம்" என எச்சரித்துத் திரும்பினர்.

பு.மா.இ.மு. வின் போராட்டத்தின் பின், காந்தி நகர் பகுதி தமிழ் மாநில காங்கிரஸ் பாடை தூக்கும் போராட்டத்தை அறிவித்தது. ஆனால், பாடை தூக்கக்கூட தொண்டர்கள் இல்லாமல், ஒருவாறாக போராட்டத்தை நடத்தி முடித்தது அக்கட்சி. இந்தத் திடீர் கரிசனத்தைப் புரிந்து கொண்ட பகுதி மக்கள் வெளிப்படையாகவே அப்போராட்டத்தை நாடகம் எனக் கேலி பேச, திடீர் தமிழர்களின் முகமோ இறுகிப் போனது.

தகவல்:
பு.மா.இ.மு., ஜெயங்கொண்ட சோழபுரம்.

எமது விற்பனையில்...

மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை

பேராசிரியர் ஜார்ஜ் தாம்சன் எழுதி, இலண்டனிலுள்ள சீனக் கொள்கை ஆய்வுக் குழுவால் வெளியிடப்பட்ட இந்நூல், 16 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழில் மறுபதிப்பாக வெளிவந்துள்ளது. புரட்சிகர மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்திற்கும் நடைமுறைக்கும் உள்ள இயக்கவியல் உறவை விளக்கும் அரிய நூல்.

விலை ரூ.40.00

(பதிவு அஞ்சலில் பெற ரூ. 52.00)

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.


படிப்பகம்

www.padippakam.com

# ஊழலை உரிமையாக்குவதே லல்லுவின் சமூக நீதி

கிடப்பாரையை முழுங்கிவிட்டு, அது செரிக்க சுக்கு கசாயம் குடித்தவன் நிலை போலாகிவிட்டது பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவின் அரசியல் வாழ்வு. பீகாரில் நடந்த 1000 கோடி ரூபாய் மாட்டுத் தீவன ஊழல் தொடர்பாக லல்லுவின் மீதும் வழக்குத் தொடரப் போவதாக மைய் புலனாய்வுத் துறை அறிவித்த நாளிலிருந்தே, பீகாரில் அவருக்கு எதிராக வீசும் அலையைச் சமாளிக்க முடியாமல் திக்குமுக்காடிப் போய் நிற்கிறார், அவர். பா.ஜ.க., சமதா கட்சி போன்ற எதிர்க் கட்சிகளிடமிருந்தும், இடது - வலது கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளிடமிருந்தும் மட்டுமல்லாது, பீகார் மாநில ஜனதா தளத்திலும் கூட, "லல்லு பதவி விலக வேண்டும்" என எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

"இவ்வூழலின் சூத்திரதாரிகளுள் ஒருவரான பீகார் கால்நடைத் துறையின் முன்னாள் பிராந்திய இயக்குநர் ஷியான் பெகாரி சின்கா மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுதே, அவருக்குப் பணி நீட்டிப்பு வழங்கியுள்ளார் லல்லு. மற்றொரு அதிகாரியான பி.என். சர்மா மீது தீவன ஊழல் தொடர்பான மாநில அரசின் விசாரணைகள் லல்லுவால் தள்ளுபடி செய்யப்பட்டன. கால்நடைத் தீவனம் வழங்கியதாக போலி ஆவணங்கள் தயாரித்த ஜே.பி. வர்மா என்ற "இந்தியன் ஏர்லைன்ஸ்" ஊழியர், லல்லு குடும்பத்தினரின் விமானப் பயணச் செலவுகளை ஏற்றுக் கொண்டுள்ளார்" - இவைபோல லல்லுவிற்கு எதிராகப் பல ஆதாரங்களைக் கண்டுபிடித்துள்ள சி.பி.ஐ., இவ்வூழல் தொடர்பாக லல்லுவின் மீது 48 வழக்குகளைத் தொடரப் போவதாக ஏப்ரல் 27 அன்று அறிவித்தது.

"பா.ஜ.க - சி.பி.ஐ. கூட்டுச் சதி", "மேல் சாதியினரின் சதி" என இக்குற்றச்சாட்டுகளுக்கு எதிராகப் புலம்பும் லல்லு, சாதி அரசியல் மூலம் பீகாரில் தன்னை அம்பலப்படுத்தி இயக்கம் எடுப்பவர்களின் வாயை அடைத்துவிட முயன்று வருகிறார். தனது முதல்வர் பதவியையும், அரசியல் செல்வாக்கையும் காத்துக் கொள்ள லல்லு எடுத்து வரும் இச்சதிராட்டங்களுக்கு மண்டல் ஆதரவு சக்திகளிடமிருந்தே போதிய ஆதரவு கிட்டவில்லை.

பார்ப்பன - மேல்சாதி சக்திகளுக்கு எதிராக 'சமூக நீதிக் காவலன்' என்ற முகமூடி தரித்துக் கொண்டு அரசியல் நடத்தி வந்த லல்லுவை மட்டுமா இவ்வூழல் அம்பலப்படுத்தியுள்ளது? சுய நல அரசியல் நோக்கங்களுக்காகவே ஊழல் குற்றச்சாட்டுகள் குழி தோண்டிப் புதைக்கப்படுகின்றன; அல்லது தோண்டி எடுக்கப்படுகின்றன என்பதையும் இவ்வூழல் விசாரணை மீண்டும் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது.

தேவேகௌடா பிரதமராக இருந்த வரை சி.பி.ஐ.-ன் இயக்குநர் ஜோகிந்தர் சிங் கால்நடைத் தீவன ஊழல் விசாரணையைத் தாமதப்படுத்தி முடக்கிவிட மிகுந்த அக்கறை காட்டினார். இதனால் பீகார் உயர்நீதி மன்றம், "இவ்வூழலை விசாரித்து வரும் சி.பி.ஐ அதிகாரி யு.என். பிஸ்வாஸ், தனது விசாரணை அறிக்கைகளை சி.பி.ஐ. தலைமையிடம் தர வேண்டாம்" என உத்தரவிட்டது இந்த உத்தரவை எதிர்த்து ஜோகிந்தர் சிங் உச்சநீதி மன்றப் படிக்கட்டுகளில் ஏறி 'நீதி' பெற்றார். ஏப்ரல் 25 - அன்று பீகார் உயர்நீதி மன்றத்தில், "2,000 பக்க விசாரணை அறிக்கையைப் படிக்க கால அவகாசம்" கேட்ட ஜோகிந்தர் சிங், அடுத்த இரண்டு நாட்களுக்குள் ஊழல் எதிர்ப்புப் போராளியாக மாறியது வியப்புக்குரியதுதான்.

பிரதமருக்கும் தெரிவிக்காமல், தனது துறை சார்ந்த சட்ட வரைமுறைகளையும் மீறி ஏப்ரல் 27 - ஞாயிற்றுக்கிழமையன்று "லல்லுவின் மீது வழக்குத் தொடரப் போவதாக"த் தன்னிச்சையாக அறிவித்தார், ஜோகிந்தர் சிங். அவரின் இந்த திடீர் ஞானோதயத்திற்கு, தேவே கௌடாவின் பதவி பறி போனதும், தனது பதவிக்கு ஆபத்து காத்திருந்ததும் தான் காரணமேயின்றி, வேறு புனித நோக்கம் எதுவும் கிடையாது.

**லல்லுவை ஆதரித்தும் (மேலே), லல்லுவை எதிர்த்தும் (கீழே) பாட்னாவில் நடந்த பேரணிகள். இரண்டுக்கும் நாற்காலியே நோக்கம்.**







படிப்பகம்

www.padippakam.com

தேவே கௌடாவை தில்லியில் அரசியல் அநாதையாக்கிய ஜனதா தளத் தலைவர்களுள் லல்லுவிற்குக் குறிப்பிடத்தக்க பங்குண்டு. தேவே கௌடா அரசிற்கு காங்கிரசு கொடுத்த வந்த ஆதரவை கேசரி திரும்பப் பெற்றுக் கொண்ட பிறகு, ''பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு இடைத் தேர்தல் நடத்துவது; தேர்தல் வரை தானே இடைக்காலப் பிரதமராக நீடிப்பது'' எனத் திட்டம் தீட்டினார் கௌடா. கௌடாவின் இந்த நப்பாசைக்கு ஐ.மு. தலைவர்களே முதல் எதிரியாக மாறினர். ஜோகிந்தர் மூலம் தீவன ஊழலைத் தாமதப்படுத்தி கௌடா செய்த உதவியை மறந்த லல்லு, தானும் பிரதமர் பதவிக்கான போட்டியில் குதித்தார்.

இப்படி, கூட இருந்தே குழி பறித்த ஜனதா தளத் தலைவர்களைப் பழி வாங்க தேவே கௌடா திரைமறைவில் நடத்திய நாடகத்தின் முதல் காட்சிதான் ஜோகிந்தரின் அறிவிப்பு. ஜோகிந்தர், குஜ்ரால் அரசு தனது பதவியைப் பறிக்காமல் தடுத்து நிறுத்தும் உத்தியாக இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். ஜோகிந்தரின் பதவி பறிக்கப்பட்டிருக்குமானால், ''லல்லுவுக்காக என்னைப் பழி வாங்கி விட்டார்கள்'' என்று முதலைக் கண்ணீர் விட்டிருப்பார், அவர்.

மக்கள் மத்தியில் முற்றிலும் அம்பலமாகித் தனிமைப்பட்டுப் போயிருக்கும் இச்சூழலைத் தனக்குச் சாதமாக்கிக் கொள்ள மிகவும் மும்மரமாக முயன்று வருகிறது, பா.ஜ.க. ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைக் கொள்ளையடித்த ஜெயாவை எதிர்த்து, தனது சுண்டு விரலைக் கூட நீட்டாத பா.ஜ.க., லல்லுவை எதிர்த்து தினந்தோறும் இயக்கம் நடத்தி வருவது விநோதமாகத் தோன்றவில்லையா? ஜெயாவை எதிர்ப்பதை விட, அவரோடு கூட்டுச் சேர்வது தான் அரசியல் இலாபம் எனக் கருதிய பா.ஜ.க., பீகாரில் லல்லுவை எதிர்ப்பதற்கும் இதே அரசியல் இலாப - நட்டக் கணக்குதான் காரணம்.

பீகாரில் காங்கிரசின் கைவசமிருந்த மேல்சாதி ஓட்டுக்களைக் கைப்பற்றிக் கொண்டுள்ள பா.ஜ.க., பிற்படுத்தப்பட்டவர்களின் ஓட்டுக்காக, ஜனதா தளத்திலிருந்து பிரிந்து வந்த சமதா கட்சியுடன் கூட்டணி சேர்ந்துள்ளது. லல்லுவைப் பதவி விலகக் கோரி தெருப் போராட்டங்கள் நடத்தி வரும் பா.ஜ.க. வின் நோக்கம் இந்த ஓட்டு வங்கியை விரிவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான். இந்த அருவருப்பான உண்மையை பா.ஜ.க.வின் மேல்மட்டத் தலைவர்களே ஒப்புக் கொண்டுள்ளார்.

''ஜனதா தளம் இப்பிரச்சினையில் (தீவன ஊழல்) முடிவுக்கு வராமல் இழுத்துக் கொண்டு செல்வதையும், மாநில ஆளுநர் லல்லுவை விசாரிக்க அனுமதி தராமல் காலம் கடத்துவதையும் நாங்கள் விரும்புகிறோம். இதன் மூலம், ஒருபுறம் இரண்டாகப் பிளவுபட்டு நிற்கும் ஜனதா தளத்தையும், மறுபுறம் கோபம் கொண்ட பொது மக்களையும் நாங்கள் எதிர்கொள்வோம்'' என பா.ஜ.க.வின் உயர்மட்டத் தலைவர் பேட்டியளித்துள்ளார். இதனின் அர்த்தம் பச்சையான சுயநல அரசியல் இலாபம் தானே!

இது நாள் வரை லல்லுவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஓட்டுப் பொறுக்கி வந்த வலது - இடது போலிகள், இப்பொழுது லல்லுவை எதிர்த்துக் களம் புகுந்திருக்கிறார்கள். லல்லுவை வீழ்த்துவதற்காகப் பதினைந்து இடதுசாரி கட்சிகளைக் கொண்ட கூட்டணியொன்றை அமைத்துக் கொண்டு, ''லல்லுவின் மீது வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி தர வேண்டும்'' எனக் கோரி ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டனர். அதேபொழுதில் ஜெயா தன் மீது வழக்குத் தொடர தமிழக முன்னாள் ஆளுநர் சென்னாரெட்டி கொடுத்த அனுமதியை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்த பொழுது, அவருக்கு ஆதரவாக இடதுகளின் தலைவர் ஜோதிபாசு குரல் எழுப்பினார். ''ஜெயா விவகாரத்தில் ஆளுநர் அனுமதி தர உரிமையில்லையாம்; லல்லு விசயத்தில் ஆளுநர் விரைந்து அனுமதி தர வேண்டுமாம்'' இது தான் போலிகளின் இரட்டை நாக்கு.

''லல்லுவின் செல்வாக்கு சரிந்து கொண்டு வருகிறது; இனி இம்மண் குதிரையின் மீதேறி சவாரி செய்வது தற்கொலைக்குச் சமமானதோடு, கொள்கை விளக்கமும் அளிக்க முடியாது. பீகாரில் காங்கிரசின் செல்வாக்கு செல்லக் காசாகிவிட்டது. பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர 'மதச்சார்பின்மை' கொள்கை இடந் தராது'' - இத்திரிசங்கு நிலையில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளத்தான் வலது - இடது போலிகள் சந்தர்ப்பவாதக் கூட்டணியொன்றை அமைத்துக் கொண்டு, ஊழல் எதிர்ப்புப் போராட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள். ஊழலின் மொத்த உருவமான காங்கிரசின் ஆதரவோடு மைய அரசில் அதிகாரத்தைச் சுவைத்து வரும் போலிகளுக்கு, லல்லுவை எதிர்க்க என்ன தகுதி இருக்கிறது?

ஊழலைப் பொருத்தவரை ஓட்டுக்கட்சிகளின் அணுகுமுறையே, ''மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்'' என்பதுதான். இலட்சக்கணக்கில் செலவழித்து எம்.பி., எம்.எல்.ஏ. பதவிகளைப் பிடிக்கும், ஓட்டுகட்சிப் பேர்வழிகள், போட்ட பணத்தை எப்படி திரும்ப எடுக்கிறார்கள் என்பது ஊரறிந்த இரகசியம். ''பொது வாழ்க்கைக்கு வருவதே பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்கத்தான்'' என்ற சீரழிந்த அரசியல் கலாச்சாரத்தை எல்லா ஓட்டுக்கட்சிகளிலும் காண முடியும். ஆளுங்கட்சியா அல்லது எதிர்க்கட்சியா என்பதைப் பொருத்துதான் ஊழலில் ஓட்டுக்கட்சிகளின் பங்கும் பாத்திரமும் மாறுபடுகிறது.

இந்நிலையில் ஓட்டுக்கட்சிகள் ஒன்றின் மீது மற்றொன்று ஊழல் சேற்றை வாரியிறைத்து, தன்னை மட்டும் உத்தமனாகக் காட்டிக் கொள்வது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும். 'அரசியல் என்றாலே ஓட்டுச் சீட்டு அரசியல்தான்' என மக்கள் நம்பிக் கொண்டிருக்கும் வரைதான் ஓட்டுக்கட்சிகளின் இந்தக் கபட நாடகம் செல்லுபடியாகும். பாராளுமன்ற அரசியலுக்கு அப்பாற்பட்ட மாற்று அரசியல் பாதை உண்டு என மக்கள் உணரத் தலைப்படும்பொழுது, இவ்வூழல் பேர்வழிகள் நாட்டை விட்டே ஓட வேண்டியிருக்கும்.

• ரஹீம்

## தொழிலாளர் தின உரிமைக்காகப் போராட்டம்!

### கே.ஜி. நிர்வாகம் - போலீசு கூட்டுச் சதி முறியடிப்பு

கோவை மாவட்டத்தில் மேட்டுப் பாளையத்தில் இயங்கி வரும் ''சாரதா டெர்ரி பிராடக்ட்ஸ்'' தொழிலாளர்கள் தொடர்ச்சியாகவும், சமரசத்திற்கு இடமில்லாமலும் போராடி அவ்வாலையில் ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கத்தை நிறுவியுள்ளனர். தொழிற்சங்கம் சார்பில் முதன் முதலாக தொழிலாளர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடும் முகமாக, ஆலை வாயிலின் முன்பு மேடை அமைத்து கொடிக் கம்பம் நட முனைந்தனர் தொழிலாளர்கள். கொடிக் கம்பம் நடுவதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களை, தந்திரமாகப் புகைப்படம் எடுத்துக் கொண்டது, நிர்வாகம். இந்த அத்துமீறலை எதிர்த்துக் கேட்ட தொழிலாளர்களை, நிர்வாகத்தின் கைத்தடியான மனோஜ் நாக்கூசும் வார்த்தைகளால் திட்டினான். மேலும் ''உங்க அக்கா அம்மாவையா போட்டா பிடிக்கிறேன்? கொடிக் கம்பத்தைத்தான் எடுக்கிறேன்'' என அதிகாரத் திமிரில் எகத்தாளம் பேசினான் அவன்.

இது பற்றி புகார் கொடுக்கச் சென்ற தொழிற்சங்கத் தலைவர் ராஜா முகமதுவை, புகைப்பட நிபுணரைத் தாக்கினார் என்ற மோசடியான குற்றச்சாட்டைக் கூறி, கைது செய்துவிட முனைந்தது போலீசு. மேலும், ''ஆலைவாயிலின் முன்பு கொடிக் கம்பம் நடக் கூடாது; அதற்கு எங்களிடம் சட்டம் உள்ளது'' என மிரட்டவும் செய்தது. அன்றிரவே (28.04.97) போலீசின் துணையோடு கே.ஜி. நிர்வாகம் மேடையை இடித்துத் தள்ளி, கொடிக் கம்பத்தையும் வெட்டிச் சாய்த்தது. மறுநாள் காலையில் கொடிக் கம்பம் வெட்டிச் சாய்க்கப்பட்டதை அறிந்த தொழிலாளர்கள், தங்கள் உரிமையினை நசுக்கிவிடத் துடிக்கும் நிர்வாகத்திற்கு எதிராகப் போராட்டத்தைத் துவங்கி, அதில் வெற்றியும் கண்டனர். ஆலை வாயிலின் முன் மீண்டும் கொடிக் கம்பத்தை நட்டு, மே தினத்தன்று கொடியேற்றி தங்களின் உரிமையை நிலைநாட்டினர்.

தகவல்:
தொழிலாளர்கள்,
சாரதா டெர்ரி பிராடக்ட்ஸ்.

குறிப்பு: சாரதா டெர்ரி பிராடக்ட்ஸ் நிர்வாகத்தின் தொழிலாளர் விரோதப் போக்கை அம்பலப்படுத்தி 16 - 30 ஏப்ரல் '97 இதழில் வெளியாகியிருந்த செய்தியில், அந்நிறுவனம் பூச்சி கொல்லி மருந்து தயாரித்து ஏற்றுமதி செய்வதாகக் குறிப்பிட்டிருந்தோம். அது தவறு; அந்நிறுவனம், துண்டு தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## மெட்ரிக்குலேசன் – மழலையர் பள்ளிகள்

# மெக்காலேயின் உண்மையான வாரிசுகள்

*ஆங்கில வழி மழலையர் பள்ளிகளும் மெட்ரிக்குலேசன் பள்ளிகளும் தமிழினத்தின் அடையாளம் கூடத் தெரியாத அளவுக்கு, எதிர்காலத் தலைமுறையினரை உருத்தெரியாமல் சிதைக்கும் ஒரு பெரிய இன விரோத யுத்தத்தை மிக அமைதியாக நடத்தி வருகின்றன.*

சென்ற இதழ் தொடர்ச்சி...

பல மெட்ரிகுலேசன் பள்ளிகள் சீரழிந்த திரைப்பட ஆபாச பாடல்களுக்கான கூத்துகளையே ஆண்டு விழா - கலை விழா என்ற பெயரில் நடத்துகின்றன. மிக மோசமான ஏகாதிபத்திய ஆபாச கலாச்சார நாயகர்களான மைக்கேல் சாக்சன், தமிழக மைக்கேல் சாக்சனின் காட்டு கூச்சல், அரைகுறை ஆடை நடனம் இல்லாமல் இருக்காது.

இவர்கள்தான் தாய்மொழி, சொந்த பண்பாடு, உடை போன்றவற்றை அநாகரிகமாக பார்க்க கூடிய பார்வையை ஊட்டி வளர்க்கிறார்கள். ஒரு மெட்ரிகுலேசன் மாணவி தன் தந்தையிடம் ''அப்பா இனி எங்க ஸ்கூலுக்கு வரும் போது வேட்டியில வராதீங்கப்பா, புள்ளைங்களும், ஆசிரியர்களும், ஏன் தலைமை ஆசிரியருமே ஒரு மாதிரியா பாப்பாங்கப்பா,'' என்கிற அளவிற்கு நமது பாரம்பரிய உடை பற்றிய சீரழிந்த பார்வை விதைக்கப்பட்டிருக்கிறது.

**மம்மி-டாடி பண்பாட்டால் மடியும் தமிழ்ப் பண்பாடு**

தமிழில் பேசினால் தண்டனை, அபராதம், ஒரு நாள் முழுவதும் முட்டிப் போட வைப்பது போன்ற கண்மூடித்தனமான போக்கு சர்வசாதாரணமாகி விட்டது. சில பள்ளிகளில் குழந்தைகளை சேர்க்க வேண்டுமெனில் பெற்றோர்களுக்கும் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும். இல்லையேல் இடம் கிடையாது. லண்டனிலா பள்ளி இருக்குன்னு கேட்காதீங்க; அங்கு கூட இத்தகைய போக்கு இல்லை. தமிழகத்தில் உள்ள சில தமிங்கிலனத்தின் அருவருக்கத் தக்க மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் தான் இந்த நிலை.

மொழியில் மட்டுமல்ல, ஆங்கிலேயனைப் போன்ற நடை - உடை - பாவனை தான் அறிவுத்தனமாது; நாகரிகம் என்ற பார்வை பல மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் நிலவுகிறது. உதாரணமாக, தமிழகத்திலேயே மிக வறட்சியான பகுதிகளிலுள்ள பள்ளிகளில் கூட கோடை வெயிலிலும் ஆசிரியர்களும், மாணவர்களும் அவசியம் டைகட்டி, ஷூ போட்டு இன் பண்ணி வரவேண்டுமென்று கடுமையான உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் மார்ச் மாதம் அவசரமாக டைகட்டி வர தவறிவிட்டார், அவரை அழைத்து கேள்வி மேல் கேள்வி கேட்டிருக்கிறார் ''டை'' பிரியரான முதல்வர்.

இதைவிட கொடுமை, ஒரு பள்ளியில் பெரும்பாலோர் ஒரே நகரத்தை சார்ந்த மாணவர்கள், ஏறத்தாழ ஒரே சமூகத்தையும் சார்ந்தவர்கள் அப்பள்ளியிலும், வீட்டிலும், தெருவில் விளையாடும் போதும் ஆங்கிலத்தில் தான் பேச வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது.

எத்தனை பெற்றோர்கள் ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள்? வெவ்வேறு மாநிலத்தை சார்ந்தவர்கள், வெவ்வேறு தாய்மொழியாக உள்ள மைய விடுதி பள்ளிகளில்தான் மாணவர்கள் எல்லா நேரங்களிலும் ஆங்கிலத்தை தொடர்பு மொழியாக பயன்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஒரே ஊர், ஒரே தாய்மொழி எனில் அதற்கான அவசியம் இல்லை. அவர்களிடமும் ஆங்கிலத்திலேயே அவசியம் பேச வேண்டும் என்பது கண்மூடித்தனமான ஒன்று.

பெற்றோர்களிடத்திலும், சக மாணவர்களிடமும் தன்னெழுச்சியான உணர்வுகளை ஒருவர் அவரது தாய்மொழியில்தான் வெளிப்படுத்துவார். அதை ஆங்கிலத்தில் செய் என்பது, அவர்களை செயற்கையாக சிந்திக்கச் செய்து, செயற்கையாக பேசி, விளையாட வைப்பதே. இதன் மூலம் மாணவன் உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்புக்குள்ளாவான் என்பதே அறிவியலாளரின் கருத்து.

ஒரே தாய்மொழி, ஒரே ஊர்க்கார மாணவர்கள் அதிகம் உள்ள மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் அவசியமே இல்லாதபோது பள்ளி வளாகத்திற்குள் தப்பித் தவறி தமிழில் பேசிவிட்டால் மறுநாள் காலை மாணவர் பேரவையில் (அசம்பெளியில்) பலர் முன் ஆங்கிலத்தில் மன்னிப்பு கேட்க வைப்பது.

''இனிநான் தமிழில் பேச மாட்டேன், மன்னிக்கவும்; எப்போதும் ஆங்கிலத்தில்தான் பேசுவேன் என்று உறுதி கூறுகிறேன்.''

என்று தமிழில் பேசிய மாணவன் ஆங்கிலத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும். மாணவர்களிடையே மாணவ ஒற்றர்களை அமர்த்தி தமிழில் பேசுபவர்களை கண்டறிந்து அதற்கான தனி பதிவேட்டில் பதிவு செய்து ஒரு முறைக்கு மேல் எனில் ரூபாய் ஒன்று முதல் ஐந்து வரை அபராதம் வசூல் செய்கிற பள்ளிகளெல்லாம் தமிழகத்தில் இருக்கிறது.

இரண்டு எட்டாம் வகுப்பு மாணவர்கள் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழியாக சென்ற ஆசிரியரிடம் "Sir, I told him many time, but he is not asking sir" ''அப்படி செய்யாதடான்னு பலமுறை சொன்னேன்; ஆனா அவன் கேட்க மாட்டேன்ங்கிறான் சார்'' என்பதைத்தான் அப்படியே மொழி மாற்றம் செய்து அவனின் இயல்பான உணர்ச்சி வெளிப்பாடு சிதைக்கப்படுகிறது. இதுபோன்று எத்தனையோ கொடுமைகள் பட்டியல் கூறமுடியாத அளவிற்கு உள்ளது.

**தின்றதை வாந்தியெடுக்க வைக்கும் தேர்வுமுறை**

தேர்வு நோக்கத்தை மட்டுமே பிரதானமாக கொண்டு, ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு இரண்டாண்டு மாதிரி வினாத்தாளைக் கொண்டு படித்து எழுதி எழுதி பார்க்க பயிற்சித் தரப்படுகிறது. கற்றுத் தருவதை விட (coaching) பயிற்சி தான்





படிப்பகம்

www.padippakam.com

பிரதானம் என்பதுதான் இன்றைய நவீன கல்வி என்று மெட்ரிக்குலேசன் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கூட்டத்தில் பலரும் ஒருமித்த கருத்து தெரிவித்தனர். அதையே பின்பற்ற வேண்டும் என்று ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

சிந்திப்பது, சுயமாக பிரச்சனைகளுக் குத் தீர்வு காண்பது, புரிந்து கொள்வது, ஒப்பி டுவது, காரண காரியங்களை ஆராய்வது என்பதைப் பற்றியெல்லாம் யோசிக்கவே தேவையில்லை. கண்ணை மூடிக்கிட்டு திங்கி றது. தின்னதை தேர்வு என்ற பெயரில் வாந்தி எடுப்பது - அதற்குத்தான் சிறந்த பயிற்சி தரு கிறார்கள். மெட்ரிக்குலேசன் பத்தாம் வகுப்பு செய்முறை தேர்வு எப்படி நடைபெறுகிறது? பௌதிகம், வேதியியல், உயிரியல், தாவரவி யல் இந்த நான்கிலும் எவ்வளவு மோசமான வனும் நூற்றுக்கு நூறு எடுத்துவிடுவான். (25+25+25+25). எழுத்துத் தேர்வில் இந்த நான்கிலும் சேர்ந்து ஐந்து எடுத்துவிட்டால் அவன் தேர்ச்சி பெற்றவனாகிவிடுவான். முன்னூறுக்கு தேர்ச்சிக்குரிய மதிப்பெண் 105. செய்முறையில் நூறு எடுத்திடுறான், மீதி ஐந்து எழுத்துத் தேர்வுல எடுத்துடுறான், இதுக்கு பேரு ''மேற்கத்திய பாணி, ஆங்கில வழி தரமான கல்வி'' என்கிறார்கள். தேர் வுக்கு இரண்டு வருடத்திற்கு முன்பே மாணவ னுக்குத் தெரிந்துவிடும்; கட்டாயம் அறிவிய லில் அனைவரும் தேறிவிடுவோம் என்று. பிறகு எப்படி அவன் பொறுப்போடு படிப் பான், பணிந்து கடினமாக உழைப்பான் என்று எதிர்பார்க்க முடியும்?

செய்முறை, எழுத்துத் தேர்வு நடத்தும் தேர்வாளராகப் போகும் ஆசிரியர்களுக்கு என்ன சம்பளம் தருகிறார்கள்? மூன்று மணி நேர தேர்வாளராகப் போகும் கல்லூரி ஆசிரி யர்களுக்கு ரூ. 25 முதல் ரூ.50 சம்பளம்; அது தவிர பயணப்படி வேறு. ஆனால் மெட்ரிக்கு லேசன் தேர்வாளர்களுக்குச் சம்பளம் ரூ. 6/-; நிர்ணயிக்கப்படாத பயணப்படி; அதுவும் ஆறு மாதம் ஓராண்டு கழித்துத்தான் கிடைக் கும். பெரும்பாலும் ஆசிரியர்கள் இப்பணிக் குப் போக விரும்புவதில்லை. ஆனால் பள்ளி நிர்வாகமோ 'அரசு நடத்தும் தேர்வு; பள்ளிக ளுக்கு அரசின் தயவு தேவையுள்ளது. இதைப் புறக்கணிக்கக் கூடாது' என்று மிரட்டி ஆசிரியர்களைத் தேர்வுப் பணியை மேற் கொள்ள நிர்பந்திக்கிறது. இதே நிலைமை தான் விடைத்தாள் மதிப்பிடுவதற்கும். மெட் ரிக்குலேசன் பள்ளி 30,000 ஆசிரியர்க ளுக்கு, சங்கமோ, தலைவரோ எவரும் கிடை யாது. இந்தப் படித்த பட்டதாரிக் கொத்தடி மைகள் நிர்வாகம் பணித்த எந்த பணிகளை யும் செய்தே ஆக வேண்டும். மறுத்தால் வேலை அவ்வளவுதான்.

### விபரீதமான விடைத்தாள் மதிப்பீடு

மெட்ரிக்குலேசன் விடைத்தாள் மதிப் பீடு எப்படி நடைபெறுகிறது? மெட்ரிக்குலே சன் ஆசிரியர் யார் வேண்டுமானாலும், எந்த விடைத்தாளையும் மதிப்பிடலாம். இரசாயன பட்டதாரி கணிதம் கற்பித்தால், அவர் கணித விடைத்தாள் திருத்தலாம்; போதிய ஆசிரியர் இல்லையெனில் அறிவியல் பட்டதாரி எவ ரும் திருத்தலாம். புவியியலை, புவியியல் எடுத்துவரும் ஆசிரியர் மட்டுமின்றி



அரசின் தடையை மீறி, மழலையர் பள்ளிகளால் இளம் பாலகர்கள் நேர்முகத் தேர்வு செய்யப்படுவதைக் கண்டித்து பம்பாயில் நடந்த ஆர்ப்பாட்டம். தமிழகத்தில் இந்த காகிதத் தடையுத்தரவுகூடக் கிடையாது.

கணிதம், இரசாயனம், பௌதிகம், வரலாறு, ஆங்கில இலக்கியம் படித்த எவரும் திருத்த லாம்.

+2 விடைத்தாள் திருத்த ஒரு தாளுக்கு ரூ. 2.50/- எனில், மெட்ரிக்குலேசன் விடைத் தாளுக்கு ரூ. 1.25/- அதுவும் தமிழகம் முழு வதும் இரண்டே மையங்களில். வடக்கில் ஒன்று, தெற்கில் ஒன்று. தோராயமான பயணப் படி தரப்படும். உள்ளூர் ஆசிரியரைத் தவிர வெளியூர் ஆசிரியர்களுக்கு இது செலவான தாகவும் சிரமம் மிகுந்ததாகவும் இருக்கும். சிரமமாக இருந்தாலும் ஆசிரியர்கள் மறுக்க இயலாது. காரணம் தனியார் பள்ளி, சுயநிதி என்ற நிர்பந்தம்.

ஒரு விடைத்தாள் திருத்த சாதாரணமாக அரைமணி எடுத்துக் கொள்ளக் கூடியதற்குப் பதிலாக, இங்கே காலை பத்து முதல் மாலை 3.30-க்குள் நாற்பது முதல் ஐம்பதைத் திருத்தி விட்டு வெளியூர்க்காரர்கள் பேருந்தை பிடிக்க அவசர அவசரமாக ஓடி ஊர் போய்ச் சேர வேண்டும்.

மெட்ரிக்குலேசன் மாணவர்கள் பணம் கட்டிப் படிக்கும் பெரும் புள்ளிகளின் பிள் ளைகள்; ஆசிரியர்களோ சுயநிதி நிறுவனத் தின் அடிமைகள். எனவே தேர்ச்சி விழுக் காடு அதிகம் காட்ட வேண்டும். கண்ணை மூடிக் கொண்டு பெரும்பாலும் அனைவரை யும் தேர்ச்சி பெற வைக்க வேண்டும். குறைந்த நேரத்தில் அதிகப்படியான விடைத் தாளை திருத்திவிட்டு ஊருக்கு பேருந்து பிடிக்க வேண்டிய அவசரம் வேறு. விளைவு என்னவாகும்? சராசரி மாணவனும், திறன் மிகுந்த மாணவனும் ஏறத்தாழ சம மதிப் பெண் எடுப்பார்; எதுவுமே எழுதாதவனும் மதிப்பெண் போடவே இடமில்லா வெற்று விடைத்தாளைச் சமர்ப்பித்தவனுமே தோல் வியுற நேரிடும். இது தான் ''ஆங்கிலமொழி தரமான மேற்கத்திய பாணி கல்விமுறை.'' காசு கட்டி படிக்கும் பெரிய இடத்துக் கல்வி.

மெட்ரிக்குலேசன் முறை உள்ள மேனி லைப் பள்ளிகளிலும், இதர மேனிலைப் பள் ளிகளிலும், +2-வில் இரண்டு மொழிப் பாடங்களில், தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்களும், அதிக மதிப்பெண் கிடைக்கிறது என்பதால், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிப் பாடங்களை எடுத்துக் கொண்டு தமிழைப் புறக்கணிக்கிற போக்கு அதிகரித்து வருகிறது.

+2 அளவில் உள்ள பிரெஞ்சு, எட்டாம் வகுப்பிற்குரிய தரத்திலும், தாராளமாகத் திருத்துவதால் தமிழைவிட அதிகமாக மதிப் பெண்ணும் கிடைக்க வாய்ப்புள்ளதால் மொத்த மதிப்பெண் அதிகரிக்கும் வாய்ப்புள் ளது என்பது ஒரு காரணம். +2 தமிழ் ஓரள விற்கு +2 தரத்திற்குத் திருத்தும் முறைகளில் சிலர் கஞ்சத்தனமாக மதிப்பிடும்போது, மிக நன்றாகப் படிப்பவனும் பத்து முதல் பதி னைந்து மதிப்பெண் இழக்க வாய்ப்புள்ளது போன்ற காரணங்களினால் தமிழ் புறக்கணிக் கப்பட்டு வருகிறது.

இத்தகைய மெட்ரிக்குலேசன் பள்ளி களை என்ன அந்நியனா, வெள்ளைக்காரனா வச்சு நடத்துகிறான், அல்லது வைத்து நடத்த வேண்டுமென்று இலண்டனிலிருந்து உத்த ரவு போடுகிறான்?

தமிழகத்தில், தமிழனாய்ப் பிறந்தவர் கள்தான், சமூக, அரசியல் பொருளாதாரக் காரணங்களால் தமிங்கிலனாய் மாறி தமிழி னத்தின் மொழி, அரசியல், பண்பாடு, பொரு ளாதாரம் போன்ற சகல துறைகளிலும் எதி ராய் நிற்கிறான்.

1947-க்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அனைத்துக் கட்சிகளும், எதிர்கட்சிப் பிரமு கர்களும் அவர்களின் நெருங்கிய ஜமீன்கள், தொழில், வணிக கூட்டாளிகள்தான் இந்த ஆங்கில வழி, மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக் குப் பின்னால் நின்று இயக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

தேசிய இன, மொழி, அரசியல், பொரு ளாதார, பண்பாட்டு விடுதலைக்குக் குரல் கொடுக்கும் ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டுப் போராடுவதன் மூலமே, இந்த இழிநிலையை அடியோடு நம் மண்ணிலிருந்து துடைத்தெ றிய முடியும்.

● ந. சுந்தர்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## கேளிக்கை - விபச்சார விடுதியாக மாறிப்போன டூமா

ரசியப் பாராளுமன்றமான டூமா, இரவு நேரங்களில் குடித்து விட்டுக் கும்மாளமிடும் கேளிக்கை விடுதியாக மாறிவிட்டது. ரசிய பத்திரிகைகளில் செய்தி வெளியான பின்பு யெல்ட்சின் அரசு டூமா வளாகத்தினுள் "வோட்கா" மது விற்பதையும், அருந்துவதையும் தடை செய்தது. அந்தத் தடை உத்தரவு எப்படிச் செயல்படுகிறது என அறியச் சென்ற இரண்டு பெண் பத்திரிகையாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியாளர்களும், பாராளுமன்றப் பணியாளர்களும் குடித்துக் கும்மாளமடிப்பதோடு, விபச்சாரிகளை அழைத்து வந்து உறவு கொள்ளும் விபச்சார விடுதியாகவும் டூமாவை மாற்றியிருப்பதை நேரடியாகக் கண்டு அம்பலப்படுத்தியுள்ளனர். அப்பெண் பத்திரிகையாளர்களிடமும் உறவு கொள்ள வரும்படி பேரம் நடத்தியுள்ளனர் அங்கிருந்த பொறுக்கிகள்!

## "மேல்சாதி - ஆணாதிக்க வெறியர்களுக்குச் சமாதானம்!" கர்நாடகா அரசின் நற்செய்தி!

தாழ்த்தப்பட்ட பெண்களைத் தேவதாசிகளாக்கும் பார்ப்பனிய பிற்போக்கு பண்பாடு இன்று வரை தொடர்ந்து நடந்து வரும் கர்நாடகா மாநிலத்தில், கெட்ட ஆவிகளைத் துர விரட்டுவதற்காக அத்தேவதாசிகளின் மீது சேற்று நீரை வாரிக்கொட்டும் காட்டுமிராண்டித்தனம், சடங்கு என்ற பெயரில் பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. சமீபத்தில் அம்மாநிலத்தில் பெல்காம் மாவட்டத்தைச் சேர்ந்த சிக்கொடிப் பகுதியில் இச்சடங்கு நடைபெறப் போவதை அறிந்த போலீசார் அங்கு சென்று, சேற்று நீரை ஊற்றத் தயாராக இருந்த 400-க்கும் அதிகமான மேல்சாதி ஆணாதிக்க வெறியர்களைச் சமாதானப்படுத்தி, சடங்கு நடைபெறாமல் தடுத்து விட்டனர். கடந்த ஆண்டும் போலீசார் இதே போல சமாதானம் செய்து சடங்கைத் தடுத்துள்ளனர். இப்பிற்போக்கு சக்திகளுக்கு சமாதானம்தான் தண்டனையா?

## புள்ளி விவர மோசடி

குஜராத் மாநிலத்தில் சூரத் மற்றும் கைரா மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்பு நடத்த அதிகாரிகள் பட்டாளமொன்று களத்தில் குதித்தது. இவர்கள் எடுத்த கணக்கின்படி வைரப் பட்டறை மற்றும் நெசவாலைகள் நிறைந்த சூரத்தில் 300 குழந்தைத் தொழிலாளர்களும், கைராவில் இருபதே குழந்தைத் தொழிலாளர்களும்தான் உள்ளனர். ஆனால், ஆபத்துகள் நிறைந்த சூரத் தொழிலகங்களில் மட்டும் 6000 குழந்தைத் தொழிலாளர்கள் வேலை செய்து வருவதாக தனியார் கல்வி நிறுவனம் ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது. அதிகாரிகள் கணக்கெடுத்தால் மட்டும் குழந்தைத் தொழிலாளர்கள் மாயமாய் மறைந்து போகும் மர்மம் என்னவோ?

## இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை?

வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மத்திய விவசாயத் துறை மந்திரி சதுரானன் மிஸ்ராவுக்கும், அக்கட்சியின் முன்னாள் எம்.பி.யான போகேந்திர ஜாவுக்கும் இடையேயான கோஷ்டிப் பூசலைத் தீர்க்கும் பொறுப்பை காஞ்சி சங்கர மடம் ஏற்றுக் கொண்டுள்ளது. பீகார் மாநிலத்தில் மதுபானி எனும் ஊரில் நடந்த "சங்கர நேத்ராலயா" கண் மருத்துவமனையின் அடிக்கல் நாட்டு விழாவின்போது இக்கோஷ்டிப் பூசல் வெளிப்படையாக வெடித்தது. மட சங்கராச்சாரி ஜெயேந்திரர் கண் முன்னே, ஜாவின் ஆதரவாளர்கள் மிஸ்ராவுக்கு எதிராகக் கருப்புக் கொடி காட்டினர். பின்னர் ஜெயேந்திரர் கட்சியின் தார்பங்கா அலுவலகத்திற்கு விஜயம் செய்து, ஜாவைச் சந்தித்து, இருவருக்குமிடையே சமாதானம் உண்டாக ஆசிர்வதித்துத் திரும்பினார்.

## கல்கத்தா தொழிலாளர்கள் பட்டினிச் சாவு

மேற்கு வங்கத்தில் இயங்கி வந்த "மெட்டல் பாக்ஸ்" என்ற தரகு முதலாளித்துவ நிறுவனம் 87-ஆம் ஆண்டு தொடங்கி தனது ஆலைகள் ஒவ்வொன்றையும் இழுத்து மூடி வந்தது. இறுதியாக, கடந்த மார்ச் மாதம் கல்கத்தாவில் இயங்கி வந்த இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தையும் மூடிவிட்டது. கொழுத்த இலாபத்தில் இயங்கி வந்த இந்நிறுவனம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய சம்பள பாக்கியைக்கூட கடந்த பத்தாண்டுகளாகத் தரவில்லை. நொடித்துப் போன அத்தொழிலாளர்களுள் 133 பேர் பட்டினியால் மாண்டு போயினர். இப்பட்டினிச் சாவுக்குக் காரணமான அம்முதலாளியைத் தண்டிக்க வக்கற்ற 'மார்க்சிஸ்ட்' அரசு, "பொறுப்பற்ற தொழிற்சங்கவாதம்தான் இந்த அவல நிலைக்குக் காரணம்" எனக் கூறி, தொழிலாளர்களைக் குற்றவாளியாக்கிவிட்டது.

## "மன்னர்கள் பவனி வருகிறார்கள்!"

மார்டின் மாஸே என்ற தனியார் நிறுவன அதிகாரி, பிரதமர் வரும் பாதையில் குறுக்காகச் சென்றார் என்ற 'குற்றத்திற்காக' தில்லி போலீசாரல் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டார். மே 9-ஆம் தேதி இரவு தில்லி ஓபராய் மேம்பாலத்தின் வழியாக தனது ஸ்கூட்டரில் வீடு திரும்பிக் கொண்டிருந்த இவர் மீது ஜீப்பைக் கொண்டு மோதி கீழே உருட்டிவிட்டு, பின் ஆள் ஆரவமற்ற இடத்திற்கு இழுத்துச் சென்று தாக்கியது தில்லி போலீசு. முன் பற்கள் தெறித்து, உதடு கிழிந்து, முகமெங்கும் இரணமாகி இரத்தம் வழியத் தொடங்கிய பின்தான் போலீசிற்கு நிதானம் வந்தது. மூன்று வருடங்களுக்கு முன்பு இந்தக் 'குற்றத்திற்காக' நட்ட நடுத் தெருவில் ஒருவரைச் சுட்டுக் கொன்டனர் தில்லி போலீசார். அந்த வகையில் மார்டின் மாஸே அதிருஷ்டசாலிதான். என மகிழ்ச்சி அடையலாம்!



மார்டின் மாஸே

## அழிவின் விளிம்பில் மாலத்தீவு

இயற்கை எழில் நிறைந்த உலகின் மிகப் பெரிய தீவான மாலத் தீவுகள் இன்னும் முப்பது ஆண்டுகளுக்குள் கடலில் மூழ்கி விடும் அபாயம் எழுந்துள்ளது. பூமியின் வெப்பம் அதிகரித்து, கடல் நீர் மட்டம் இரண்டு மீட்டர் உயர்ந்தாலே போதும் - பூமிப் பந்தில் மாலத் தீவு இருந்த இடத்தில் கடல்நீர்தான் இருக்கும். 92-ஆம் ஆண்டு நடந்த சர்வதேசச் சுற்றுச் சூழல் மாநாட்டில் பூமியின் வெப்பத்தைக் குறைக்க ஒப்பந்தமிடப்பட்டது. ஆனால் ஒப்பந்தத்தின் விதிகளை மேற்குலகம் மதித்து நடப்பதேயில்லை எனப் புலம்புகிறது மாலத்தீவு அரசு.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at ... PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

# இதுதான் இன்றைய இந்தியா



பம்பாய் நகரில் வொர்லிப் பகுதியில் இருந்த சேரியினை அப்புறப்படுத்திவிட்டு, அங்கே அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டும் திட்டத்தின் துவக்க விழாதான் இந்தப் படம். சிவசேனாவின் மூளையில் உதித்த பிரம்மாண்டமான சேரி ஒழிப்புத் திட்டத்தின் ஒரு பகுதிதான் இந்தத் துவக்க விழா. அந்தச் சேரியில் ஓலைக் குடிசையின் கீழோ, தகரக் கூடாரங்களிலோ வசித்து வந்தவர்களுக்கு கழிப்பறை, குளியல் அறை, சமையல் அறை, மின்சாரம் எனச் சற்று வசதிகள் நிறைந்த ஒரு வீடு கிடைத்து விடும். "பரவாயில்லையே! சிவசேனாவிற்கு ஏழைகள் மீது இத்துனை கரிசனமா?" எனப் பலருக்குப் புருவங்கள் உயரலாம். ஆதாயமில்லாமல் ஆற்றில் இறங்கவில்லை அக்கட்சி. "சிவசேனாவை ஆதரிக்கும் வீட்டு மனை அதிபர்களிடம் சேரிகள் தாரை வார்க்கப்படும். அவர்கள் தங்கள் செலவில் பல அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கட்டுவார்கள். சேரியில் வசித்து வந்த ஒவ்வொருவருக்கும் 225 சதுர அடி கொண்ட வீடொன்றை ஒதுக்கி விட்டு, மீதி வீடுகளையெல்லாம் கொழுத்த இலாபத்திற்கு விற்று விடுவார்கள்" — இதுதான் சிவசேனா பாணி சேரி ஒழிப்பு. இந்த 'அதிருஷ்டம்' பம்பாயில் உள்ள சேரிகளில் வாழும் அனைவருக்கும் கிடைத்து விடுமா?

அந்தக் கேள்விக்கு விடைதான் இந்தப் படம். இவரின் பெயர் விலாஸ் சூர்யவம்சி. பம்பாயில் மல்வானி சேரிப் பகுதியில் வசித்து வந்தார், இவர். திடீரென ஒரு நாள் அச்சேரியினுள் புகுந்த போலீசு பட்டாளமொன்று, அங்கே வசித்து வந்தவர்களை எல்லாம் அடித்துத் துரத்தியது. எதிர்த்து நின்ற விலாஸை, 12 போலீசார் துரத்தி துரத்தித் தாக்கி கையை உடைத்தனர். குடிசையினுள் போலீசு நுழைவதற்கு முன் தனது அற்ப உடைமைகளையாவது பாதுகாப்பாக எடுத்துச் சென்று விடலாம் என எண்ணிய நிர்மலாவின் வயிற்றில் தாக்கினர். நிறைமாத கர்ப்பிணியான அப்பெண் மயங்கிச் சரிய, அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் தாங்கிப் பிடித்து மருத்துவமனையில் சேர்த்தனர். ஒன்றல்ல இரண்டல்ல, ஐய[illegible] குடிசைகளைப் பிய்த்தெறிந்து, தனது எஜமானர்கள் இட்ட கட்டளையை [illegible]றைவேற்றிய களிப்பில் திரும்பியது போலீசு. அச்சேரி மக்கள் அரசாங்க நிலத்தில் குடிசை போட்டு குடியிருந்தது கொடுங் குற்றமாம்! பிழைப்பு தேடி கிராமத்தை விட்டு நகரத்திற்கு ஓடிவந்த உழைப்பாளிகள் வேறு எங்குதான் வசிக்க முடியும்?

சேரி ஒழிப்பு, அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு என்ற கவர்ச்சித் திட்டம் ஒரு புறம்; அரசு நிலத்தில் குடியிருந்தவர்களை மாற்று ஏற்பாடு எதுவும் செய்து தராமல் அடித்துத் துரத்தும் அதிகாரம் மறுபுறம். இதை இன்னுமா சகித்து வாழ்வது?

